# தாலம்

## ஓலை - 2



2019

பனை எங்கள் சூழல்!
பனை எங்கள் பண்பாடு!
பனை எங்கள் பொருளாதாரம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பனை மான்மியம்" - 2019

COOP

22.07.2019 - 28.07.2019

பனை அபிவிருத்தி எழுச்சி வாரத்தை

முன்னிட்டு

# "தாலம்"

ஓலை - 2

சஞ்சிகை

வெளியீடு செய்யப்படுகின்றது

## வெளியீடு:-

- ★ பனை தென்னை வ.அ.கூ.சங்கங்கள்
- ★ பனை தென்னை வ.அ.கூ.சங்கங்களின் கொத்தணிகள்
- ★ பனை தென்னை வ.அ.கூ.சங்கங்களின் சமாசங்கள்
- ★ பனை தென்னை வ.அ.கூ.நிறுவனங்களின் பேரிணையம்
- ★ பனை அபிவிருத்திச் சபை.
- ★ வடமாகாண கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சஞ்சிகை விபரம்

| | |
|---|---|
| மலரின் பெயர் | : "தாலம்" ஓலை 2 |
| மலரின் வகை | : பனையும், கூட்டுறவும் |
| தொகுப்பாசிரியர் | : திரு.சு.ஶ்ரீகாந் |
| மொழி | : தமிழ் |
| பதிப்பு | : முதற்பதிப்பு |
| வெளியீட்டுத் திகதி | : 22.07.2019 |
| இடம் | : சங்கிலியன் பூங்கா, முத்திரைச்சந்தி, யாழ்ப்பாணம். |
| பயன்படுத்திய தாள் | : 70gsm |
| அளவு | : B 5 |
| வண்ணப்பக்கம் | : 120gm |
| படிகளின் எண்ணிக்கை | : 500 |
| மொத்தப்பக்கங்கள் | : xvii + 34 |
| அச்சுப்பதிப்பு | : யாழ் மாவட்ட பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாச அச்சகம். |
| அட்டைப்பட கணணி வடிவமைப் | : அச்சக முகாமையாளர் திரு சி.சுகிர்தன். |
| உஷாத்துணை | : பனை பாடும் பாடல் – இந்தியா.<br>பனைச் செல்வம்.<br>தால விலாசம்.<br>இணையம். |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2018ம் ஆண்டில் நடைபெற்ற "பனை மான்மியம்" நிகழ்வின் பதிவுகள்









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பொது சன நூலகம் யாழ்ப்பாணம்

# சமர்ப்பணம்

**தால காவலர்**
**அமரர் கலாநிதி கந்தையா கனகராசா**
**11.02.1927–22.07.1998**

**"உரைப்பார் உரைப்பவை எல்லாம் இரப்பார்க்கு ஒன்று ஈவார் மேல் நிற்கும் புகழ்"**

என்கின்ற வள்ளுவன் வாக்குக்கு இணங்க தாலவளத்தின் பரம்பலுக்காக அர்ப்பணிப்புடனும் தீர்க்க தரிசனத்துடனும் சேவையாற்றிய "மில்க்வைற்" நிறுவனத்தின் தொழில் அதிபர் அமரர் கலாநிதி கந்தையா கனகராசா (மில்க்வைற் கனகராசா) அவர்கள் தனது வருமானத்தின் பெரும் பகுதியை சமூக சேவைகளுக்காக செலவிட்டமை நாம் அறிந்த ஒன்றாகும்.

இவற்றிற்கு மேலாக இயற்கையை நேசித்த ஒரு பெருமகான். வீதி ஓரங்களில் பல்வேறு இடங்களில் பல்வேறுபட்ட மரங்களை நாட்டி தனது செலவில் அவற்றை வளர்த்தெடுத்தவர்.

இதில் பனை மரங்கள் பரம்பல் குறைவான இடங்களுக்கு நல்ல இன பனம் விதைகளை கொள்வனவு செய்து வழங்கியதோடு, நடுகையும் செய்து வைத்தார். பனைசார் உற்பத்திகளை ஊக்கப்படுத்தியும் தனது தொழிலகத்தின் மூலம் வெளியிட்ட செய்தி இதழ்களிலும் பனை வளர்ப்பின் அவசியத்தையும் பனையின் பயன்களையும் பிரசுரித்து மக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்தினார்.

பல்வேறுபட்ட பனை தொடர்பான நூல்களையும் தனது நிறுவனத்தின் மூலம் வெளியீடு செய்து இலக்கிய வரலாற்றிலும் நீங்கா இடம் பிடித்தார்.

யாழ் குடாநாட்டிற்கு வெளியிலும் பனைமரப் பரம்பலை ஊக்குவித்த இவரது செயற்பாட்டிற்கு அடையாளமாக அவரால் நடப்பட்டபனை மரங்கள் இன்று பெரு விருட்சமாக நின்று சான்று பகிர்கின்றன.

தூர நோக்க சிந்தனைமிக்க அமரர் கலாநிதி கந்தையா கனகராசா அவர்களின் சேவையை கௌரவிக்குமுகமாக மீண்டும் "தாலம்" ஓலை - 2 சஞ்சிகையையும் அவருக்கே சமர்ப்பணம் செய்வதில் பெருமகிழ்வடைகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாலம் மலரின் உள்ளே


| | | |
|---|---|---|
| 01 | சமர்ப்பணம் | i |
| 02 | இதழ் பிரித்து மலர் நுகர்வோருக்கு | ii-iii |
| 03. | ஆசிகள் கோடி | iv |
| 04. | கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரின் பார்வையில் தாலம் ஓலை 2 | v |
| 05. | வாழ்த்துச் செய்திகள் | vi-xvii |
| 06. | பனை வழித் தடங்கள் | 01-05 |
| 07. | பனையே வாழி! | 06 |
| 08. | பனையும் பயனும்/பனையும் வாழ்வும் | 07-08 |
| 09. | அமிர்த விருட்சமே வாழி! | 09 |
| 10. | நிலைபேறான அபிவிருத்திக்கு வணிகங்களின் பங்களிப்பு | 10-14 |
| 11 | பாலகன் முருகன் கடைக்கண் பார்த்திட வேண்டும் | 15 |
| 12. | அடி மரத்தில்.... | 16-18 |
| 13. | பனை மான்மியம் | 19 |
| 14. | சமாசப் பயணப்பாதையில்.... | 20-22 |
| 15. | அமிர்தம் சுரக்கும் அக்ஷ்சய பாத்திரம் | 23 |
| 15. | பிள்ளைகளுக்கு ஏற்படும் தாக்கங்களும் அவற்றைக் கையாளும் முறைகளும் | 24-27 |
| 16. | தமிழரின் ஆதாரம் பனை!, குலமகளே வாழியவே ! | 28 |
| 17. | பனைவளம் சார்ந்த அபிவிருத்தியில் மகளிர் கட்டமைப்புக்களின் பங்களிப்பு பூரணமடையாமை. | 29-30 |
| 18. | பனை எங்கள் சூழல் | 31 |
| 19. | பனை எங்கள் பொருளாதாரம் | 32-33 |
| 20. | நன்றி பகிர்தல் | 34 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இதழ்பிரித்து மலர் நுகர்வோருக்கு .........



வடக்கு மாகாணத்தின் அடையாளமாக கருதப்படும் பனையினால் கிடைக்கப்பெறும் உணவுப் பண்டங்களையும் அழகுசாதனப் பொருட்களையும், தளபாடங்களையும் ஏனைய உற்பத்திப் பொருட்களையும் காட்சிப்படுத்தி விற்பனை செய்வதுடன் அதன் சிறப்புக்களையும் எடுத்தியம்பும் வகையில் வருடமொருமுறை நடாத்தப்படும் "பனை அபிவிருத்தி வாரம்" பனை எங்கள் சூழல்! பனை எங்கள் பண்பாடு! பனை எங்கள் பொருளாதாரம்! என்னும் கருப்பொருளில் சிறப்பாக நடைபெறுகின்றது. இவ்வருடம் 5வது ஆண்டாக தொடர்ச்சியாக நடாத்தப்படும் இவ்விழாவில் "தாலம்" ஓலை -2 சஞ்சிகையும் வெளியிடப்படுகின்றது.

பனை தொடர்பாக பல்வேறுபட்ட சஞ்சிகைகள் நாடக வடிவிலும், கவிதை வடிவிலும், பாடல்களாகவும் வெளியிடப்பட்டுள்ளன. 2018ம் ஆண்டு ஜனவரி மாதம் இந்தியா தமிழ் நாடு உடுமலை ரவி என்பவரால் பதிப்பிக்கப்பட்ட "தால விலாசம்" மீள் பதிப்பில் தொகுப்பாசிரியர் புலவர் செ. அரசு அவர்கள் 1964ம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் மில்க்வைற் சோப் கம்பனி அதிபர் பனைநேசர் திரு.க.கனகராசா அவர்கள் பதிப்பித்துள்ளார் என்று குறிப்பிட்டுள்ளார்.

1980ல் William Ferguson என்பவர் பனை மரத்தின் அடிப்படைச் செய்திகளை உள்ளடக்கிய நூல் ஒன்றை "The Palmyra Palm" என்ற பெயரில் தொகுத்து வெளியிட நினைத்தார்.

தென் இந்தியா, மேற்குத் தொடர்ச்சி மலை, தமிழ்நாடு போன்ற இந்தியப் பகுதிகளையும், இலங்கை, தென்கிழக்கு ஆசியா, கிழக்கு ஆசியா, லண்டன் ஆகிய நாட்டின் துறைசார்ந்தவர்களிடமும் Point Pedro, Batticaloa, American missionaries of madras, and Jaffna போன்ற அமைப்புக்களின் உதவியுடன் தமிழில் கிடைத்த பனைசார்ந்த நூல்களின் தொகுப்பை சேகரித்து பல்வேறு பயன்பாடுகளைப் பாடலாகத் தமிழில் எழுதியிருந்ததில் Simon Cassic Chity அவர்களால் பதிப்புச் செய்யப்பட்ட தஞ்சாவூர் மாவட்டம் கும்பகோணம் குடந்தை அருணாச்சலம் அவர்கள் இயற்றிய பாடலில் ஆயிரம் பயனைத் தரக்கூடிய பனைமரப் பயன்களில் ஒருசில கூறுகிறேன் எனக்கூறி 801 பயன்படுகள் என்று குறிப்பிட்டிருந்ததை ஆங்கிலத்தில் மொழிமாற்றம் செய்யும் பணியை இலங்கையில் இருந்த சமயப் பரப்பாளர் உதவியுடனும், இலங்கை வாழ் தமிழர்களிடமும் தான் சேகரித்த தரவுகளை ரூம்பையஸ் (Rumphius) அவர்களிடம் ஒப்படைத்தார். அவருக்குத் துணையாக C.A லாறன்ஸ், Mr lee, Younger Herman, Dr. Buchanan Hamilton's ஆகியோர் இணைந்து மொழி பெயர்த்து "Thalavilasam" என்ற பெயரில் ஒரு தொகுப்பைச் சேர்த்து "The Palmyra palm" நூலை வெளியிட்டுள்ளார்.

குடந்தை அருணாச்சலம் கலிவெண்பாவில் எழுதிய பாடலும் இலங்கையில் வழக்கிலிருந்த "பனை ராசன் நாடகத்தையும்" இணைத்து மொழிமாற்றம் செய்யப்பட்ட ஆங்கிலப் பதிவைத்தான் யாழ்ப்பாணத்து நவாலியூர் க.சோமசுந்தரப்புலவர் மீண்டும் தமிழில் "தாலவிலாசம்" என்ற பெயரில் நூலாக வெளியிட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1796-1854 காலப்பகுதியில் வாழ்ந்த அச்சுவேலியைச் சேர்ந்த காசிநாதப் புலவர் "தால புராணம்" அல்லது "பனங்காய்ப் பாரதம்" என்ற நூலை எழுதியுள்ளார் என்றும், இதில் சில பாடல்கள் மட்டுமே கிடைத்துள்ளதாகவும் ஆ. சதாசிவம்பிள்ளை அவர்கள் 1886ல் எழுதிய "பாவலர் சரித்திர தீபகம்" நூலில் கூறியுள்ளதாக அறிய முடிகின்றது.


இலங்கையைச் சேர்ந்த நவாலியூர் சோமசுந்தரப்புலவரால் 1940ம் ஆண்டுக்கு முன்பு கலிவெண்பாவில் சுமார் 400 அடிகளில் எழுதப்பட்ட நூலை 1940ல் தொல்புரம் பனைத்தொழில் விருத்தி ஐக்கிய சங்கம் அச்சிட்டு வெளியிட்டுள்ளது. நவாலியூர் சோமசுந்தரப் புலவரால் ஆக்கப்பட்ட "தால விலாசம்" 1940, 1964, 2018 ஆகிய ஆண்டுகளில் அச்சிடப்பட்டுள்ளமை பெருமைக்குரிய விடயமாக காணப்படுகின்றது.

அந்த வகையில் தாலம் ஓலை - 2 உம் பல்வேறுபட்ட பனையின் அம்சங்களையும், மகத்துவத்தையும் தாங்கி வெளிவருகின்றது. இம்மலரைத் தொகுத்து வழங்க சந்தர்ப்பம் வழங்கிய அனைத்துக் கூட்டுறவாளர்களுக்கும் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்றேன்.

**"தாலம் ஒரு நாள் ஞாலம் போற்றும் பேசு பொருளாக மாறும்"**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிகள் கோடி.........



"ஒன்றா உலகத்து உயர்ந்த புகழ் அல்லால்
பொன்றாது நிற்பது ஒன்று இல்"

என்கின்ற வள்ளுவர் வாக்குக்கு இணங்க அழியாமல் நிலைத்து நிற்கும் பனை வளமானது பூமி உள்ளவரை நிலைத்து நின்று பல்வேறுபட்ட பயன்களை மண்ணுலகில் வாழும் உயிர்களுக்கு ஆற்றுவதற்காக இறைவனால் படைக்கப்பட்ட ஒன்றாகும்.

பல்வேறுபட்ட பெயர்களை தன்னகத்தே கொண்டு தேவலோக கற்பக விருட்சத்திற்கு ஒப்பானதாக ஞாலத்தில் கருதப்படும் தால விருட்சமானது அமிர்தம் சுரக்கும் அக்ஷய பாத்திரம் போல் பல்வேறு மருத்துவ குணங்கொண்ட உணவுப் பண்டங்களையும் அழகு சாதனப் பொருட்களையும் தளபாடங்களையும் மக்களின் வாழ்விற்கு வளம் சேர்க்க வழங்கிக் கொண்டிருக்கின்றது.

இவ்வாறான ஒரு விருட்சமானது இயற்கையின் கொடையாக எம்மோடு பின்னிப் பிணைந்து வாழ்ந்து கொண்டிருப்பதால் பெருமை கொள்கின்றோம். அவ்விருட்சத்தினை நன்றியோடு நினைவிருத்தி அதன் சிறப்பியல்புகளை வெளிப்படுத்தும் நோக்குடன் உருவாக்கப்படும் "தாலம்" ஓலை – 2 சஞ்சிகையானது காத்திரமான மலராக பிரபஞ்சத்திற்கு கிடைக்க நல்லாசிகளை வழங்குவதில் இயற்கை அன்னையாக பெருமைகொள்கின்றேன்.

"பனையின் பலன்கள் பல்கிப் பெருகி
பண்பான வாழ்வை வழங்க என்றும் நல்லாசிகள் கோடி"

*- இயற்கை அன்னை -*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வடக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரது பார்வையில் "தாலம்" ஓலை – 2

பனையின் மகிமைகளை எடுத்தியம்பும் "பனை மாண்மியம்" என்ற பனை எழுச்சி வாரத்தினை ஐந்தாவது வருடமாக நடாத்துவதை யிட்டுப் பெருமகிழ்ச்சி அடைகிறேன். அதன்போது வெளியிடப்படும் தாலம் சஞ்சிகையின் இரண்டாவது வெளியீட்டுக்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதில் இரட்டிப்பு மகிழ்ச்சியடைகிறேன்.

தால காவலர் மில்க்வைற் தொழிலதிபர் அமரர் கலாநிதி கந்தையா கனகராசா அவர்களது சிரார்த்த தினமான 22 ஜுலையில் ஆரம்பித்து ஒருவார காலத்துக்கு பனைக்கு மகுடமிட்டு அழகு பார்க்கும் நிகழ்வாக இது அமையப்பெற்று வருவது சிறப்பானதொன்றாகும். தால காவலரது "பனை வளர்ப்போம் பயன்பெறுவோம்" என்ற பனம் விதையின் நடுகைத் திட்டம் அவரது தூரநோக்குடனான சிந்தனையின் வெளிப்பாடாகும். அதை நெஞ்சிருத்தி "பனை எங்கள் சூழல்! பனை எங்கள் பண்பாடு! பனை எங்கள் பொருளாதாரம்!" என்ற சமகால புரிதலுடனான தொலைநோக்குடன் முன்னாள் வடக்கு மாகாண கூட்டுறவு துறை அமைச் சரும் எனது தாவரவியல் ஆசானும் ஆகிய உயர் திரு பொன்னுத்துரை ஐங்கரநேசன் அவர்கள் 2015இல் ஆரம்பித்த பனை எழுச்சி வார நிகழ்வுகள் இந்த வருடமும் சிறப்பாக ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன.


இங்கே வடக்கின் ஐந்து மாவட்டங்களிலிருந்து வரும் கூட்டுறவு அமைப்புக்கள் மற்றும் பனை அபிவிருத்திச் சபை என்பனவற்றால் ஒன்றையொன்று விஞ்சும் கண்காட்சி மற்றும் விற்பனைக் கூடங்களை பர்வையாளர்களைக் கவரும் விதமாக அமைக்கப்பட்டிருப்பதுடன் பனை தொடர்பான கைவினைப் பொருட்கள் செய்வதற்குப் பழக்கும் விவரணக் கூடமொன்றும் அமைக்கப்பட்டுள்ளது. இவையாவும் கிராமிய பொருளாதாரமொன்றின் பக்க பலமாகப் பனையும் இருப்பதை எடுத்தியம்புவனவாகும்.

பனைசார் தொழிற்பாடுகளில் ஈடுபட்டுவரும் கூட்டுறவு இயக்கத்தினர் ஒவ்வோர் வருடமும் இந் நிகழ்வை ஆவலுடன் எதிர்பார்த்திருந்து சிறப்பான திருவிழாவாகக் கொண்டாடி மகிழ்வது அவதானிக்கப்பட்டு வந்துள்ளது. பனைசார் தொழிற்பாடுகளில் ஈடுபடுவோர் மாத்திரமன்றி, பனைக் காவலர்கள், பனை ஆராய்ச்சியாளர்கள், பனை ஆர்வலர்கள் என்று பலரையும் ஈர்த்துவரும் இந்நிகழ்வு மென்மேலும் மெருகேறிச் செல்கின்றது. அதற்காக அயராது பணியாற்றி வருவோரை நான் பாராட்டுகின்றேன். இந்த நிகழ்வு சிறப்பாக நடந்தேறவும் தாலம் சஞ்சிகையின் ஓலை-02 வெளியீடு சிறப்புறவும் எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறேன்.

"வளர்க பனை வாழ்க மனை'

பொ.வாகீசன்,
கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும்
கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரும்,
வடக்கு மாகாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வடக்கு மாகாண ஆளுநரின் வாழ்த்துச் செய்தி

மிகச்சிறந்த பன்முகப் பயன்பாடு மிக்க "கற்பகதருவான" பனை மரம் இம் மாகாணத்தின் ஆயிரக்கணக்கான குடும்பங்களின் வாழ்வாதாரத்திற்கு உதவும் இயற்கைத் தாவரமாக உள்ளது.

வட மாகாணத்தின் பனைசார் உற்பத்தியின் மூலம் கிடைக்கும் பொருளாதார நன்மை களையும் சூழலியல் நன்மைகளையும் நீடித்து நிலைக்கத்தக்க வகையில் பேணுவதற்கு தற்பொழுது காணப்படும் பனை மரங்களை அழியாமல் பாதுகாப்பதும் தொடர்ந்தும் புதிய மரங்களை வளர்த்தெடுப்பதும் மிக அடிப்படையான அனுகுமுறைகளாக அமையும். அவற் றுடன் பனை வளம் தொடர்பான விஞ்ஞான தொழில்நுட்ப ஆராய்ச்சியின் மூலமான முடிவு களும் பொருத்தமான திசையில் செயற்படுத்தப்பட வேண்டும்.


வடமாகாண கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களமும், பனை அபிவிருத்திச்சபை, பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களும் இணைந்து யூலை 22ம் திகதி தொடக்கம் யூலை 28ம் திகதி வரை நடாத்தும் பனை அபிவிருத்திக் கண்காட்சியும் அதனை முன்னிட்டு வெளியிடப்படும் "தாலம்" சங்சிகையின் இரண்டாவது மலர் வெளியீடும் பனை வளத்தின் தாவரவியல் மற்றும் சூழலியல் பரிமாணங்களை பேசுவதாகவும் பொருளாதார வர்த்தக முக்கியத்துவத்தை வெளிப்படுத்துவதாகவும் அமைவது பாராட்டத்தக்கது.

பனை வளம் பேணும் முயச்சியில் பங்களிக்கும் அனைவருக்கும் வாழ்த்துக்கள்!

நன்றியுடன்,
கலாநிதி சுரேன் ராகவன்,
ஆளுநர்,
வடமாகாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வடக்கு மாகாண பிரதம செயலாளரின் வாழ்த்துச் செய்தி

வடமாகாணத்தின் கைத்தொழில் அபிவிருத்திப் பாதையில் மூலவளர்ச்சிக் காரணியாக விளங்கிவருவது பனைசார் உற்பத்திப் பொருட்களே. தற்பொழுது இலங்கை அரசாங்கத்தினால் முன்னெடுக் கப்பட்டுவரும் இரண்டாயிரம் ஏற்றுமதியாளர்களை உருவாக்கும் தேசிய வேலைத்திட்டத்தின் கீழாக, இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் பங்காற்ற லுடன், பல முயற்சியாண்மையாளர்கள், தொழில்தருநர்களை உருவாக்கவும், ஊக்குவிக்க வும், பல்லின கைத்தொழில் அபிவிருத்தித் தொழில்த் திட்டங்கள் மற்றும் தொழில் முயற்சி நடவடிக்கைகள், மாவட்ட ரீதியாக பிரதேச செயலகங்களினூடாக தற்போது நடை முறைப்படுத்தப்படுகின்றன.

வடமாகாண கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தினால் வெளியீடு செய்யப்படும் இத் தாலம் சஞ்சிகை மற்றும் கண்காட்சி ஊடாக, இயற்கை கற்பகதருவான பனையின் பல் லின அம்சங்களும் அவற்றின் பயன்பாடுகள் தொடர்பான விழிப்புணர்வு, விருப்பு, தொழில் முயற்சிகள் போன்றன மக்கள் மத்தியில் உருவாகவும், பனைசார் உற்பத்திகளின் சந்தைப் படுத்தலுக்கான ஒரு நுழைவாசலாகவும் அமையும் என்பதில் எதுவித ஐயப்பாடுமில்லை.


பல தனியார் இளம் முயற்சியாண்மையாளர்கள் விசேடமாக பெண்களை தலைமைத் துவமாகக் கொண்ட பல குடும்பங்கள், பனைசார் உணவு உற்பத்திகள் மற்றும் நவீனமான அலங்காரப் பொருட்களை நவீன தொழில்நுட்பங்களினூடாக திறம்பட உற்பத்தி செய்து உள்ளூர் சந்தைகளில் குறிப்பிடத்தக்க வருமானத்தினை பெற்றுக் கொள்வதனை நன்கு அவதானிக்கக் கூடியதாக உள்ளது. வடமாகாணத்தில் மட்டுமன்றி, தலைநகரிலும்கூட, சுற்றுலாமையங்கள், உல்லாசபயணிகள் விடுதிகளில், சுற்றுலாப் பயணிகள் மிக ஆர்வத் துடன் வாங்கிச் செல்வது பனை உற்பத்திப் பொருட்களையே.

சிறு கைத்தொழிலுக்கூடான வாழ்வாதார அபிவிருத்தித் திட்டத்திற்கு எதுவித தடையுமின்றி தொடரான பயனுறுதியை பெற்றுக்கொள்வதற்கு ஏதவாக விளங்கும் வல்லின மூலப் பொருளான இப்பனையின் வளம் காக்கப்படுவது மட்டுமன்றி, இயற்கைமற்றும் வியா பார நோக்கங்களுக்கான செயற்கையிலான அழிவுகள், சேதங்கள் ஏற்படாது, கட்டுப்படுத்தல் நடவடிக்கைகளை மேற்கொள்வதிலும் மிகுந்த கவனம் எடுக்கப்படுதல் வேண்டும்.

வடமாகாண கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம் மேற்கொள்ளும் சகல சுயதொழில்சார் அபிவிருத்தி நடவடிக்கைகளிற்குப் பூரணமான ஒத்துழைப்புகள் வழங்கப்படும் எனத் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

**அ.பத்திநாதன்,**
**பிரதம செயலாளர் ,**
**வடக்கு மாகாண சபை.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வடக்கு மாகாண கூட்டுறவு அமைச்சு செயலாளரின் வாழ்த்துச் செய்தி

பனை எழுச்சி வாரத்தினை முன்னிட்டு வடக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தினால் வெளியிடப்படும் "தாலம்" சஞ்சிகையின் இரண்டாவது மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பேருவகையடைகின்றேன்.

பனை எங்கள் சூழல் !
பனை எங்கள் பண்பாடு !
பனை எங்கள் பொருளாதாரம் !

என்ற தொனிப் பொருளில் இவ்வாண்டு பனை மான்மிய எழுச்சி வாரத்தினை மிகச்சிறப்பான முறையில் பனை, தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவு சங் கங்கள் மற்றும் பனை அபிவிருத்தி சபை, வடக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம் இணைந்து ஏற்பாடுகள் செய்துள்ளன.

பனைமரம் தமிழர்களின் அடையாளம், தமிழ் சமூகத்தின் உயிர்ச் சாட்சி, பனையின் வேர் முதல் நுனி வரை பயன்தருகின்றது. பனையில் 801 பயன்பாட்டுப் பொருட்கள் இருப்பதாக "தாலவிலாசம்" என்ற நூல் கூறுகிறது.

இன்று வாழ்விடங்கள், கட்டடங்கள் அமைக்கும் தேவைக்காகவும், விறகுத் தேவைக் காகவும் நகர மயப்படுத்தலுக்காகவும் பனைமரங்கள் வகை தொகையின்றி அழிக்கப்பட்டு வருகின்றன. இந்த வகையில் பனை வளங்களை ஊக்குவிக்கும் முகமாகவும் பனைசார் உற்பத்தியாளர்களையும், பனை மரத்தொழிலாளர்களையும் ஊக்குவிக்கும் முகமாகவும் ஏற்ற வழிவகைகள் அமைக்க வேண்டியது எமது சமூகப் பொறுப்பாகும்.

இவ்வகையில் வடக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களம் மேற்கொள்ளும் பனைசார் உற்பத்திகள் சார்ந்த கண்காட்சிகள், சிறப்பு விற்பனைக் கூடங்கள், மதிப்பளிப் புக்கள் மற்றும் சிறப்பு விருதுகள் வழங்கும் நிகழ்வுகள் யாவும் சிறப்பாக இவ்எழுச்சி வாரத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருப்பது பாராட்டத்தக்கது. அத்துடன் வடக்கின் பனை மான்மியத்தினை இயம்பும் வகையில் வெளியிடப்படும் "தாலம்" சஞ்சிகைக்கும் எமது உளமார்ந்த வாழ்த் துக்களையும் வழங்குகின்றேன்.

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

இ.வரதீஸ்வரன்,
செயலாளர்,
மகளீர் விவகாரம், கூட்டுறவு அமைச்சு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வடக்கு மாகாண கூட்டுறவு அமைச்சின் முன்னாள் செயலாளரின் வாழ்த்துச் செய்தி

தமிழ் சமூகத்தின் உயிர்நாடியாக வரலாற்றுப் பொக்கிஷங்களை காலத்தோடு சுமந்து வந்து எம் இன இருப்பிற்கான தனித்துவத்தை பறைசாற்றிய தமிழ் இனத்தினதும் தமிழ் மொழியினதும் அடையாளத்தினை பதித்து வைத்த பெருமை பனை மரத்தையே சாரும்

பல்லுயிர்களின் வாழ்விடமாய் வடமாகாணத்தின் குறியீட்டுப் பொருளாய் போற்றப்படும் பனை மரம் இல்லையேல் நாம் எம் வரலாற்றுக் குறியீடுகளை இழந்திருப்போம். பனை எங்கள் சூழல் ! பனை எங்கள் பண்பாடு ! பனை எங்கள் பொருளாதாரம் ! என இனத்தின் உயிர்ச்சாட்சியாய் பனை வளர்க்கப்பட்டிருக்கின்றது. எம் வாழ்வியலுக்கான வாழ்விடம் முதல் ஆரோக்கியத்திற்கும் ஆயுட் பலத்திற்கும் உறுதியளிக்கும் உணவு வரை தனது ஒவ்வொரு பகுதிகளையும் பயனுள்ள தாக மாற்றி வழங்கும் கற்பக தருவான பனை மரத்திற்கு ஈடு இங்கு எதுவுமில்லை.

ஓலைக் குடிசை தந்த அழகிய வாழ்வும் ஒடியற்கூழ் கொடுத்த உடல் பலமும் தண்ணீர் தாகம் தீர்த்த நுங்கும் ஒன்றாய் கூடியிருந்து பிடுங்கியவித்த பனங்கிழங்கின் சுவையும் எம் சிறார்கள் கட்டி ஓடிய நுங்கு வண்டிலும் எம் மனத்திற்கு மகிழ்ச்சியைக் கொடுத்தது மட்டுமல்லாமல் இன்று வரை எம் நினைவுகளில் இருந்து நீங்கா இடம் பிடித்திருக்கின்றன.

அன்றைய காலத்தில் எம் வீடுகளை அலங்கரித்த பனை ஓலைகளை நாகரீக மாற்றத்தால் இன்று எங்கள் வீட்டு வேலிகள் கூட அனுமதிக்கத் தவறியிருக்கின்றது. இதனால் எம் சந்ததியினர் ஆயிரம் அடிக்கு கீழ் சென்று தண்ணீரை எடுத்து வந்து நிலத்தடி நீருக்கு அரண் அமைத்து கொடுத்த பனையின் பெருமிதத்தினை உணரத்தவறி நவீனத்துக்குள் புகுந்திருப்பதால் பனங்காடுகளாக இருந்த எம் தேசத்தில் ஒரு பனையினைக்கூட காணத்தவறும் துர்ப்பாக்கிய நிலையினை நோக்கி நகர்ந்துகொண்டிருக்கின்றோம்.

*" திணைத்துனை நன்றி செயினும்*
*பனைத்துனையாகக் கொள்வர் பயன் தெரிவார்"*

என்ற குறளின் உட்பொருளை இன்றைய யுகம் உணரத் தவறிய இவ்வாறான ஒரு கால கட்டத்தில் காலத்தின் தேவையையும் மாற்றத்தின் அவசியத்தையும் உணர்ந்து ஒவ்வொரு வருடமும் யூலை 22ம் திகதி தொடக்கம் யூலை 28ம் திகதி வரை பனை வாரம் கொண்டாடப்பட்டு வருகின்றது. இவ் வாரத்திற்கு பெருமை சேர்க்கும் வகையில் வெளியிடப்படும் "தாலம்" எனும் சஞ்சிகையின் இரண்டாவது மலர் இவ் வருடமும் வெளியிடப்படுவதையிட்டு பெருமகிழ்வு கொள்வதுடன் இச் சஞ்சிகையானது எம் இளம் சந்ததியினரிடையே மாற்றத்தினை தூண்டி பனை மரத்தின் மகத்துவத்தினை உணர்ந்துகொள்ள வழியமைத்துக் கொடுக்கவேண்டும்.

மேலும் இச் சஞ்சிகையின் மகத்துவத்தை உணர்ந்து "தாலம்" சஞ்சிகையின் இரண்டாவது மலரினை வெளியீடு செய்வதற்காய் நெறிப்படுத்திய கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் , வடக்கு மாகாணம் அவர்களுக்கும் மலர் வெளியீட்டுக் குழுவினருக்கும் மனமார்ந்த நன்றி களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**திருமதி ரூ.வரதலிங்கம்,**
**முன்னாள் செயலாளர்,**
**கூட்டுறவு அமைச்சு,**
**வடக்கு மாகாணம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பனை அபிவிருத்திச் சபைத் தலைவரின் வாழ்த்துச் செய்தி

பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களும், வடமாகாண கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களமும் இணைந்து வருடாவருடம் நடாத்தும் கண்காட்சியில், 2019 ஆம் வருட நிகழ்வை யொட்டி வெளியிடப்படும் "தாலம்" சஞ்சிகைக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பேருவகை அடைகிறேன்.


வடமாகாணத்தின் வளமாகிய பனையின் அபிவிருத்தியில் 1972 ஆம் ஆண்டு மிகப் பெரிய புரட்சி ஒன்று நடைபெற்றது. ஆங்காங்கே சிதறிக் கிடந்த தொழிலாளர்களை தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கங்கள் என்ற பெயரில் ஆரம்பிக்கப்பட்ட தற்போதைய பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள், ஒன்றிணைந்து, அவர்களுக்கு சமூக, பொருளாதார அங்கீகாரத்தை பெற்றுக் கொடுத்தது. கூட்டுறவுத் துறை யில் பிந்திய சேர்க்கையாக இருந்தாலும், முதிர்ந்த மற்றைய கூட்டுறவுச் சங்கங்களை விடவும், வினைத் திறனுடனும், இலாபகரமாகவும், பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங் கங்கள் இயங்குகின்றன. இதனைபலரும் பாராட்டி கூறுவதனைக் கேட்கும்போது எமக்கு பெருமையாக இருக்கின்றது.

பனை எமது பாரம்பரிய வளமாக இருந்தபோதும் அதனை பேணிப் பாதுகாபதற்கு, அதன் பயன்களை அனுபவிப்பதற்கு நாகரீகம் என்ற போர்வையில், இளம் சமூகம் பின்னிற் பது கவலைக்குரிய விடயமாகும். இதனைசீர் செய்வதற்காக பனை தென்னை வள அபி விருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள், கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம் ஆகியன எடுக்கும் நடவடிக்கைக்கு பனை அபிவிருத்திச் சபை எல்லாவித ஒத்துழைப்புக்களையும் வழங்கி வருகின்றது. எதிர்காலத்திலும் வழங்கும் என உறுதி கூறுகிறேன். பனை அபிவிருத்திச் சபை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் தேவைகளை அறிந்து குறிப்பாக அபிவிருத்தி, புதியமுதலீடுகள், புதிய இயந்திர சாதனங்கள், தொழிற் சாலைகள், ஆராய்ச்சி ஆகிய துறைகளில் அளப்பரிய பங்களிப்பை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கி வருகின்றமை விசேடமாக குறிப்பிடத்தக்கது.

"தாலம்" சஞ்சிகை பனையின் அபிவிருத்திக்கு மென்மேலும் பெரியளவில் வலுச் சேர்க்கவேண்டுமென வாழ்த்தி அமைகிறேன்.

**தலைவர்,**
**பனை அபிவிருத்திச் சபை.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மன்னார் மாவட்டச் செயலாளரின் வாழ்த்துச் செய்தி

வடக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தினால் வெளியிடப்படும் "தாலம்" சஞ்சிகைக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதையிட்டு பெரும் மகிழ்ச்சியடைகின்றேன்.

வடக்கின் கற்பகதருவாக விளங்குவது பனைவளம். கடவுள் எமக்கு வழங்கிய அருங் கொடைகளில் பனைவளமும் ஒன்று. இதனை நாம் அனைவரும் அறிவோம். இயற்கையுடன் இணைந்த வாழ்க்கையை வாழ்ந்த எமது முன்னோர்களின் வாழ்வும் இதற்கு சான்றுபகரும். பனங்கற்கண்டு, பனாட்டு, புழுக்கொடியல் , பனங்கள், பதநீர், பனங்கட்டி என நீண்டு செல்லும் பனையின் அருங்கொடைகளே எமது மூத்தோரின் திடகாத்திரமான ஆயுள் நிறைந்த வாழ்க்கைக்கும் மூலகாரணமாகும்.

இத்தகைய சிறப்புமிக்கதும், நமது வடக்கின் வாசம் வீசுவதுமான பனையின் பயன் பாட்டை எடுத்து விளக்கும் வகையில் வடக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களம் ஆண்டுதோறும் பனை அபிவிருத்திக் கண்காட்சியை நடாத்துவதும், அதனை முன்னிட்டு "தாலம்" என்ற பெயரில் சஞ்சிகையினை வெளியிடுவதும் பாராட்டத்தக்கதாகும்.

எமது எதிர்கால சந்ததியினர் மத்தியில் பனைவளம் சம்பந்தமாகவும், அதன் பயன்பாடு குறித்தும் விளக்கிக்கூற வேண்டியநிலை இன்று உள்ளது. இது விடயம் தொடர்பில் பனை உற்பத்தியுடன் சம்பந்தப்பட்ட அரச நிறுவனங்கள் திட்டமிட்டு செயற்றிட்டங்களை முன்னெடுக்க வேண்டும். இதன் மூலமே பனையின் நீடித்த பயன்பாட்டை நமது வளரும் சந்ததியினர் அறிந்துகொள்வர்.

எனவே காலத்தின் தேவையறிந்து தொடர்ந்து ஐந்தாவது தடவையாக கண்காட்சி மற்றும் இரண்டாவது தடவையாக சஞ்சிகை வெளியீட்டை ஒழுங்கு செய்துள்ள வடக்கு மாகாண கூட்டுறவுத் திணைக்கள அனைத்து உத்தியோகத்தர்களையும் பனைசார் நிறுவனங்களையும் மனமார வாழ்த்துகின்றேன்.

நன்றி.

**சி.ஏ.மோகன்றாஸ்**
**அரசாங்க அதிபர் / மாவட்ட செயலாளர்,**
**மன்னார் மாவட்டம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# யாழ்ப்பாணம் மாவட்டச் செயலாளரின் வாழ்த்துச் செய்தி

கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தினால் யூலை 22 தொடக்கம் 28ம் திகதி வரையில் நல்லூர் சங்கிலியன் பூங்காவில் நடைபெறும் பனை அபிவிருத்திக் கண்காட்சி தொடக்க நாள் நிகழ்வில் வெளியீடு செய்யப்படும் "தாலம் 2" சஞ்சிகைக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்வடைகின்றேன்.

பனைமரம் தமிழர்களின் வாழ்வில் 'தாலம்' என்னும் சிறப்பான இடத்தைப் பெற்றிருக் கின்றது. இதனை கற்பகதரு என்றே குறிப்பிட வேண்டும். பனையின் வேர் முதல் குருத்து வரை அத்தனையும் எமக்கு பயனுடையதாய் அமையும் அதேவேளை, வருடம் முழுமையும் எமக்கு ஏதாவது ஒன்றை கொடுத்துக் கொண்டிருக்கும் தாவரம் என்றால் தாலம் ஆகிய பனை மரத்தினையே குறிப்பிட முடியும்.

பனை மரங்கள் தமிழர்தம் அடையாளமாகவும், யாழ் மாவட்டத்தின் சின்னமாகவும் விளங்கும் சிறப்புடையது. தமிழர் தாயகமாகிய வடக்கு, கிழக்கிலேயே மிக அதிகமாக காணப் படுகின்றமையால், தாய் நிலத்தின் தாவரமாகி தமிழர் பண்பாட்டில் தனித்துவம் பெற்றிருக்கின் றது. யாழ்ப்பாணக் கோட்டையின் நுழைவாயிலில் ஒல்லாந்தர் பனைமர உருவத்துடன் கூடிய இலட்சினையினை பொறித்திருந்தார்கள் என அறியப்படுகின்றது. இதன்மூலம் பனை மரத் திற்கு அவர்கள் வழங்கிய முக்கியத்துவம் வெளிப்படுகின்றது.

இவ்வகையில் பனைமரத்தின் சிறப்பினையும், பயனையும் உணர்ந்து விழிப்புணர்வுச் செயற்பாடாக நம் பிரதேசத்தில் அதன் பரம்பலை அதிகரிக்கச் செய்யும் நோக்கோடு அதனை பாதுகாக்கும் குறிக்கோளுடன் எமது பண்பாட்டின் முதுசமாகிய பனை மரத்தினை பெருமிதத்துடன் போற்றியும், அதனைப் பூரணமாகப் பெற்றும் பயனடைய முடியும் எனலாம். எமது மூதாதையர் குறிப்பாக அதனை கடவுள் என்றே விழித்தனர். இதனை நற்றினை படலில் "தொன்று உறைகடவுள்" என போற்றுவதனை குறிப்பிடலாம்.

எமது கற்பகதருவான பனைமரங்கள் அழிக்கப்படாது மீளவும் அதன் பரம்பலை அதிகரிப்பதற்கும் வெளிவரும் "தாலம் 2" சிறந்த ஊக்கியாக மக்களிடத்தே அமையும் என்ற நம்பிக்கையுடன் இச்சஞ்சிகையின் மூலம் காலத்தின் தேவையை அறிந்து செயற்படும் கூட்டுறவு ஆணையாளர் மற்றும் மலர் வெளியீட்டுக் குழுவினர் ஆகியோரை பாராட்டி மலரும் "தாலம் 02" சஞ்சிகை சிறப்புடன் பயனுள்ள பல தகவல்களுடன் இதழ் விரிக்க என் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்து மகிழ்கின்றேன்.

திரு. நா.வேதநாயகன்
அரசாங்க அதிபர், மாவட்டச் செயலாளர்,
மாவட்டச் செயலகம்
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# முல்லைத்தீவு மாவட்டச் செயலாளரின் வாழ்த்துச் செய்தி

ஈழத்திருநாட்டின் வடக்கு மாகாணத்தில் வியாபித்திருக்கும் கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தினால் வெளியிடப்படவுள்ள "தாலம்" சஞ்சிகையின் இரண்டாவது மலர் வெளியீட்டிற்கான வாழ்த்துச் செய்தியை வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைவதோடு மிக வேகமாக நகர்ந்து கொணடிருக்கும் இன்றைய காலச்சூழலில் காலத்தின் தேவைக்கேற்ப முன்னெடுக்கப்படும் இவ்வாறான முயற்சியினைப் பாராட்டி நிக்கின்றேன்.

கூட்டுறவு ஒரு நாட்டின் முதுகெலும்பாக பல மக்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்திடும் ஏணியாகத் திகழ்கின்றது என்பதில் ஐயமில்லை. அவ் வகையில் பனை தென்னை வள உற்பத்தி வல்லுனர்களை கூட்டுறவுத் துறைக்குள் உள்வாங்கி அவர்களை சங்கங்களாக பதிவு செய்து ஏழைத் தொழிலாளர்களின் வாழ்வாதார வருமாணத்தை உழைப் பிற்கேற்ப ஊதியமாகப் பெறுவதற்கு அடித்தளமாக அமைத்தது கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களமே எனக்கூறின் மிகையாகாது.

தனி மனித முன்னேற்றம் சமுதாய முன்னேற்றமாக ஒருங்கிணையும் பொழுது ஒவ்வொரு சமுதாயமும் பலம் பெறுகின்றது. தனி மனித ஏற்றத் தாழ்வுகள் சமூகத்தை சிதைப்பதாக மாறும்போது சமுதாய பலம் சீர் குலைகின்ற தன்மையினையும் இன்றைய உலகில் நம்மால் காணமுடிகின்றது. அவ்வகையில் கூட்டுறவுக் கோட்பாடுகளுக்கிணங்க ஒன்றுபட்டு கல்வி, பொருளாதார, சமூக மற்றும் பண்பாடு என்பவற்றில் சிறப்படைந்து எதிர் காலம் நோக்கி முன்னேறி அதனூடாக கூட்டுறவு சமூகத்தினை உருவாக்குகின்ற பெருமை கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தையே சாரும்

அத்தோடு கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களமானது ஒவ்வொரு வருடமும் நடாத்தி வரும் பனை மான்மியம் மற்றும் பனை வார எழுச்சி நிகழ்வுகள் யாவும் மக்களிடையேயான ஒருங்கிணைப்பினை வலுப்பெறச் செய்கின்றன. அத்தோடு ஒவ்வொரு சமூகமும் கூட்டாண் மையும் கரம் கோர்ப்பின் நிலையான அபிவிருத்தியென்பது நமது உள்ளங் கைகளிலேயே.

சிறந்த மனிதர்களைக் கொண்ட நாடொன்றைக் கட்டியெழுப்பும் பொருட்டான தற்போதைய தத்துவத்தினுள் "தாலம்" சஞ்சிகை வெளியீடு வெற்றியடைய வேண்டுமென வாழ்த்துவதோடு வாசிப்பு பழக்கமும் அதற்கான நேரமும் சுருங்கி விட்ட இன்றைய காலச் சூழலில் இவ்வாறான சஞ்சிகையின் பிரசவிப்பானது ஒவ்வொரு சமூகத்தின் மத்தியில் கிடைக்கும் வரப்பிரசாதமேயெனலாம். காலவோட்டத்தினால் காலாவதியாகிப் போய்க் கொண்டிருக்கும் இலக்கியங்களுக்கு புத்துயிரூட்டும் வகையில் வெளியிடப்படும் இவ்வாறான சஞ்சிகைகள் நீண்டகால நோக்கத்தோடு சமூகத்தை நல்வழிப்படுத்தும் விதத்தில் ஆக்கங் களைப் பெற்று "தாலம்" சஞ்சிகையானது சிறந்த முறையில் வெளிவந்து அனைவரது கைகளிலும் தவழ வேண்டுமென எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்தித்து எனது மனம் நிறைந்த நன்றிகளையும் வாழ்த்துக்களையும் அன்போடு பகிர்ந்து நிற்கின்றேன்.

*" கூட்டுறவே நாட்டின் உயர்வு "*
*" ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு "*

**திருமதி றூ.கேதீஸ்வரன்,**
**மாவட்டச் செயலாளர்,**
**மாவட்டச் செயலகம்.**
**முல்லைத்தீவு.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வவுனியா மாவட்டச் செயலாளரின் வாழ்த்துச் செய்தி

பனை அபிவிருத்திக் கண்காட்சியை முன்னிட்டு வெளியிடப்படவுள்ள "தாலம்" சஞ்சிகைக்கு வாழ்த்துரை வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

கற்பக தருவாக விளங்கும் பனையின் அனைத்து பாகங்களும் மனிதர்களுக்கு பயன்தரக்கூடியவையாக உள்ளபோதிலும் இன்றைய காலகட்டத்திலே நவீன தொழில்நுட்ப வளர்ச்சியினால் மக்கள் அனைவரும் பொலித்தீன், பிளாஸ்டிக் பொருட்களையே அதிகம் நேசிக்கின்றார்கள். இவை பயன்படுத்துவதற்கு மிகவும் இலகுவாக காணப்பட்டாலும் சூழலுக்கு அதிகம் தீங்கினையே விளைவிக்கின்றன. தற்போது உலக நாடுகளிலும் இப்பிரச்சினை பாரிய சவாலாக உள்ளது.

எமது இலங்கை தேசத்திலே இயற்கை வளங்கள் போதிய அளவில் காணப்படுகின்ற போதிலும் மேற்கைத்தேய நாடுகளின் நாகரீக ஈர்ப்பினால் இவ்வளங்களை உரிய முறையில் பயன்படுத்த முடியாத துர்ப்பாக்கிய நிலை தற்போது ஏற்பட்டுள்ளது. இன்றைய தலைமுறையினருக்கு பனை மரத்தின் பயன்பாடுகள் பற்றி அறியத்தருவது பெரியோர்களாகிய எமது கடமையென்றே நான் நினைக்கின்றேன்.

கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களமும் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள், பனை அபிவிருத்திச்சபை ஆகியன ஒன்றிணைந்து நல்லூர் சங்கிலியன் பூங்காவிலே ஏற்பாடு செய்துள்ள இக் கண்காட்சியானது அனைவருக்கும் மிகவும் பயனுள்ளதாக அமைவதுடன் மழுங்கடிக்கப்பட்ட பழமையான கைவினைப் பொருட்களை மீண்டும் நினைவுபடுத்தக்கூடியதாக அமைவதுடன் அருமையான ஒரு செயற்பாடாக அமையும் என்பதில் எதுவித ஐயமும் இல்லை. அது மட்டுமின்றி இக் கண்காட்சியின் நிமிர்த்தம் வெளியிடப்படவுள்ள "தாலம்" சஞ்சிகையில் பல்வேறு தரப்பினரதும் தரமான ஆக்கங்களும் அனைவருக்கும் பயன்தரக்கூடிய வண்ணம் அமையும் என்பது எனது நம்பிக்கை.

"தாலம்" சஞ்சிகை வெளிவருவதற்கு பூரண ஒத்துழைப்பை வழங்கிய அனைவரையும் பாராட்டுவதுடன் இக் கண்காட்சி பயனுள்ள வகையில் நடைபெறுவதற்கு எனது மனமார்ந்த வாழ்த்துக்களையும் தெரிவிக்கின்றேன்.

**ஐ.எம். ஹனீபா,**
**மாவட்டச் செயலாளர்,**
**மாவட்டச் செயலகம்,**
**வவுனியா.**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# கிளிநொச்சி மாவட்டச் செயலாளரின் வாழ்த்துச் செய்தி

வடக்கு மகாகாண சபையின் கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தினால் நடாத்தப்படவுள்ள பனை அபிவிருத்திக் கண்காட்சியினை முன்னிட்டு வெளியீடு செய்யப்படவுள்ள தாலம் சஞ்சிகையின் 2வது மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மனமகிழ்வுறுகின்றேன்.


பல வகையான பயன்களை நெடுங்காலத்திற்கு தரவல்ல பனை மரத்தை கேட்டதைக் கொடுக்கும் தேவலோகத்து மரமெனவும் கற்பகதரு எனவும் குறிப்பிட்டனர் நம் முன்னோர். இத்தகைய சிறப்பு வாய்ந்த பனை வளத்தைக் கொண்ட வடக்கு மாகாணத்தின் பனை சார்பான உற்பத்திகளில் தங்கியுள்ள குடும்பங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு நடத்தப்பட்டுவரும் பனை அபிவிருத்திக் கண்காட்சியானது தொடர்ச்சியாக 5 வருடங்களாக நடாத்தப்பட்டு வருவதன் ஊடாக பனை உற்பத்திகளுக்கான சிறந்த சந்தை வாய்ப்பினை பெற்றுக்கொடுப்பதற்கு பாரிய பங்களிப்பினை வழங்கி வருகின்றமை சிறப்புக்குரிய விடயமாகும்.

கிளிநொச்சி மாவட்டத்தில் இயங்கிவரும் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக அங்கத்தவர்களுக்கான கடன் வழங்கல், சேமிப்பு திட்டங்களை நடைமுறைப்படுத்தல் போன்ற சேவைகளையும் ஆற்றிவருகின்றமை பாராட்டுக்குரியதாகும். கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களம், வடமாகாண பனை தென்னை வள கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் பனை அபிவிருத்திச் சபை ஆகியன இணைந்து நடாத்திவரும் இக்கண்காட்சியானது தொடர்ந்து நடைபெறுவதற்கும் தாலம் சஞ்சிகை சிறப்பாக வெளியிடப்படுவதற்கும் எனது வாழ்த்துக்களையும் இதற்காக உழைத்த அனைவருக்கும் எனது நன்றிகளையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**சுந்தரம் அருமைநாயகம்,**<br>
**மாவட்டச் செயலாளர்,**<br>
**கிளிநொச்சி மாவட்டம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வடக்கு மாகாண கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுத் தலைவரின் வாழ்த்துச் செய்தி

கற்பகதரு என சிறப்பித்துப் போற்றப்படும் பனையின் பயன்பாடுகளும் பனையின் விதை முதற்கொண்டு முதிர்ந்த பனை மரம் வரையும் மாத்திரமின்றி பனையின் விதையிலிருந்து பனங்கிழங்கு தொடக்கம் நுங்கு, பனம்பழம், பனையோலை , கள், பதநீர் போன்ற பனையின் சகல பாகங்களும், உற்பத்திப் பொருட்களும் எமக்கு அதிகம் பயன் தருகின்றன. ஆனால் நாமோ இவ் அற்புத விருட்சமான பனை மரத்தை அழிப்பதோடு மாத்திரமல்லாது அதனை மீள நடுகை செய்வதில் எவ்வித அக்கறையும் இல்லாமலிருக்கின்றோம். நம் பிரதேசத்தில் மழை பெய்யாதிருப்பதற்கு பனை போன்ற மரங்களை அழித்தொழிப்பதும் ஒரு காரணியாக கருதப்படுகின்றது. பனை மரமானது எம்மவரின் சிறப்புக் குறிகாட்டியாகும். பலபேருக்கு வாழ்வாதாரமாகவும் தொழில் வாய்ப்பினையும் தந்து கொண்டிருக்கும் விருட்ச சக்தியாகவும் திகழ்கின்றது.

பனை அபிவிருத்திக் கண்காட்சியுடன் "தாலம்" எனப்படும் பனையின் பெயரில் சஞ்சிகையானது வருடாந்தம் வெளியிடப்பட்டுக்கொண்டிருப்பதையிட்டு என் மகிழ்ச்சியினைத் தெரிவிப்பதோடு, இச் சஞ்சிகையை வெளிக்கொண்டுவரும் பணியில் ஈடுபட்ட அனைவருக்கும் எனது பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் வருங்காலத்தில் பனைவளம் பல்கிப் பெருகிடவும் சஞ்சிகை சிறப்புடன் மலர்ந்திடவும் எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**சே.ஸ்ரீனிவாசன்,**
**தலைவர்,**
**கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழு.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# யாழ். மாவட்ட பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவு சங்கங்களின் சமாசத் தலைவரின் வாழ்த்துச் செய்தி

வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவு நிறுவனங்களும் வடக்கு மாகாண சபை, கூட்டுறவுத் திணைக்களமும் இணைந்து நடாத்தும் "பனை மான்மியம்" - 2019 பனை அபிவிருத்தி வாரத்தில் வெளிவரும் "தாலம்" -2 மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமிதம் அடைகின்றேன்.

பனை எங்கள் சூழல் ! பனை எங்கள் பண்பாடு ! பனை எங்கள் பொருளாதாரம் ! எனும் தொனிப்பொருளுடன் 2015ம் ஆண்டு பனை அபிவிருத்தி வாரக் கண்காட்சி ஆரம்பிக்கப் பட்டது. அப்பொழுது வடக்கு மாகாண சபையில் கூட்டுறவுத்துறைக்கு பொறுப்பாகவிருந்த அமைச்சர் திரு பொ. ஐங்கரநேசன் அவர்களால் ஆரம்பிக்கப்பட்டு இன்று வருடா வருடம் மிகச்சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகின்றது.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பனைப்பரம்பலுக்கு காரணகர்த்தாவாக இருந்தவர் அமரர் கலாநிதி கந்தையா கனகராசா அவர்கள். இப் பனை மரங்களை நம்பி வாழும் சமூகத்தை ஒன்றிணைத்து கூட்டுறவு நிறுவனமயப்படுத்த அயராது உழைத்த முன்னோடிகளில் திரு க.நடராசா, அமரர் சு.நடேசு, செனட்டர் அமரர் ஜி.நல்லையா அவர்களும், கூட்டுறவு அமைப்புக்களாக நிறுவி சட்ட அந்தஸ்த்தை வழங்க வழிவகுத்த அப்போதைய நிதி அமைச் சராக இருந்த என்.எம்.பெரேரா அவர்களும் இங்கு நினைவு கொள்ள வேண்டியவர்கள்.

இவ்வகையில் உருவாக்கப்பட்ட பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் இன்று பல விழுதுகள் தாங்கி பெருவிருட்சமாக வளர்ந்துள்ளன. இதனால் பல ஆயிரக் கணக்கானவர்களின் வாழ்வு வளம் பெற்றுள்ளது. இந் நிறுவனங்களிலே பலருக்கு வேலை வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது. இதனை மேலும் வலுப்படுத்த தற்போதைய அரசு வரவு செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கி வாய்ப்பளித்துள்ளது. நாம் இதனை சரியாகப் பயன்படுத்தி அடுத்த கட்டத்திற்கு நகரவேண்டும். பனை அபிவிருத்தி வாரத்தில் பனை வளத்தின் பல்வேறுபட்ட விடயங்களையும் வரலாற்றுத் தடங்களையும் தாங்கி வெளிவரும் "தாலம்" -2 மலரானது அடுத்த சந்ததியினருக்கு பயனுறுதி மிக்கதாக அமைய வேண்டும் என வாழ்த்துவதில் பெருமிதமடைகின்றேன்.

நன்றி.

**வ.தெய்வேந்திரம்,**
**தலைவர்,**
**யாழ். மாவட்ட ப. தெ. வ.அ.கூ. சங்கங்களின் சமாசம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# “பனை மான்மியம்” -2019 நிகழ்வில் கௌரவிக்கப்படும் சங்கங்களின் சிறந்த அங்கத்தவர்கள்



திரு அ.சின்னராசா
கோண்டாவில் பனை தென்னை
வள அபி. கூட்டுறவுச் சங்கம்



திரு தி.இந்திரசித்து
பண்டத்தரிப்பு ப.தெ.வ.
அ.கூ.சங்கம்



திரு பா.விஜயகுலசிங்கம்
தெல்லிப்பழை ப.தெ.வ.
அ.கூ.சங்கம்



திரு தே.நந்தகுமார்
மானிப்பாய் ப.தெ.வ.
அ.கூ.சங்கம்



திரு இ.பாஸ்கரன்
கரவெட்டி ப.தெ.வ.
அ.கூ.சங்கம்



திரு சி.கிருஸ்ணபாலேந்திரன்
கொடிகாமம் ப.தெ.வ.
அ.கூ.சங்கம்



திரு க.யோகராசா
அனலைதீவு ப.தெ.வ.
அ.கூ.சங்கம்



திரு ஆ.புவனேந்திரன்
யாழ்ப்பாணம் ப.தெ.வ.
அ.கூ.சங்கம்



திரு இ.ரமேஸ்
கோப்பாய் ப.தெ.வ.
அ.கூ.சங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம்

# பனை வழித் தடங்கள்

*திருமதி. த. பவானி,*
*முகாமைத்துவ உதவியாளர்,*
*பனை அபிவிருத்திச் சபை.*

பனை பூமியில் உயிர்கள் தோன்றிய காலம் முதல் உயிரினங்களின் வாழ்வியலுடன் ஒன்றியதாக எண்ணத் தோன்றுகிறது. பனை மரமானது உலகில் முதல் தோன்றிய ஆபிரிக்காக் கண்டத்திலிருந்து, கடல் வழியாக கரை ஒதுங்கி வரட்சி நிலங்களில் விதைகள் முளைவிட்டதாக அறியப்பட்டுள்ளது.

உலகில் உள்ள நாடுகளுள் இலங்கை, இந்தியா, இந்தோனேசியா, பிரான்ஸ், ஜேர்மன், இத்தாலி, போத்துக்கல், தாய்லாந்து ஆகிய நாடுகளில் பனைமரம் வளர்ந்து பயன் வழங்கிக் கொண்டிருக்கிறது. ஆதிகாலத்தில் செய்திகளை, தகவல்களை அறியப்படுத்த மிருகங்களின் தோல், மரங்களின் பட்டைகள், பனையின் ஓலைகள் ஆகியனவற்றை பயன் படுத்தி உள்ளனர். இவற்றுள் இன்றுவரை பனையோலையில் எழுதப்பட்டவைகள் மட்டும் பழுதடையாமல் பாதுகாப்பாக இருக்கின்றது. ஏனையவை அழிந்துவிட்டன.

பனைமரம் தனது வளர்ச்சிப் பருவத்தில் ஏற்படும் இடையூறுகளைத் தாங்கி அவற்றினை ஏற்படுத்தும் விலங்குகள், மனிதர்கள், சுற்றுச்சூழல் ஆகியனவற்றிற்கு உதவி வழங்கி தன்னையும் விருத்தி செய்கின்றது. “பனைமரம் பாதாதி கேசத்திற்கும் பயனளிக்கும்” என்னும் பழமொழி பனையின் பயன்பாட்டின் ஆழ் அகலத்தை உணர்த்துகின்றது. பனை வேர்கள் நிலத்தடி நீர் வளத்தினை பாதுகாக்கின்றது. மழை வீழ்ச்சிக்கு இவ் உயரிய பனை மரத்தின் இலைகள் (ஓலைகள்) இன்றியமையாத ஒன்றாகும். பனையின் சகல பாகங்களும் இறுதியில் எரிபொருளாகவும், பசளைகளாகவும் மண்வளத்தினை பாதுகாத்து,இயற்கையுடன் சங்கமிக்கின்றது.

விண்ணுலகத்தில் “கற்பகதரு” என ஒரு மரம் இருந்தது என்றும், அதனிடம் கேட்ட பொருளை கேட்ட பொழுதில் கொடுக்கவல்லது என்றும், இந்துமத புராணங்களில் கூறப்பட்டுள்ளன. எனினும் இவ் விருட்சம் வழங்கும் பயன், அவரவர் முன்வினைப் பயனின் பெறுபேறாக கிடைக்கும் என்பதனை நீதி நூல்கள் பாடிய, பிற்காலத்து ஔவையார் வெளிப்படுத்தி உள்ளார்.

“எழுதிவா றேகாண் இரங்குமட - நெஞ்சே
கருதியனா றாமோ மருமம் - கருதிப் போய்க்
கற்பகத்தைச் சேர்ந்தார்க்குக் காஞ்சிரங்காய் ஈந்ததேல்
முற்பவத்தில் செய்த வினை” (ஔவையார் - வாக்குண்டாம் 22)

நெஞ்சே நீ கடும் பிரயத்தனத்தின் மத்தியில் கற்பகதருவை நெருங்கி கேட்கும்போது உன் முன்வினைப் பயனின் தீமையின் பொருட்டு காஞ்சிரங்காய் எனும் நச்சுக்காயை தரும். என மேற்படி பாடலில் குறிப்பிடப்பட்டுள்ளது. பூலோக “கற்பகதரு” என புகழ்ந்து கூறப்படுகின்ற பனையின் பாகங்கள் யாவும் பயன்பாட்டுக்கு உரியவையாக அமைந்துள்ளது. வினைப்பயன் அளவில் கேட்பதை வழங்கும் விண்ணுலக கற்பகதருவுடன் ஒப்பிட்டு நோக்கில், பூலோக “கற்பகதரு” எவ்வித அளவீடுகளும் இன்றி முற்றுமுழுதாக தன்னை பயனுள்ளதாக அர்ப் பணிக்கின்றது என்பது குறிப்பிடக்கூடிய ஒன்றாகும். பனையின் வளர்ச்சிக் காலத்தினை பின்வருமாறு அடையாளப்படுத்தி உள்ளனர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

01 வருடம் - பீலி, 02 - 10 வருடம் - போந்து
11 - 13 வருடம் - வடலி, 14 - 60 வருடம் - பனை
61 - 100 வருடம் - முதிர் பனை

பனைகளுள் பெண் பனையினை "பெண்ணை" என்ற பெயர் கொண்டு அழைப்பர். பெண்ணையையும், பெண்ணையும் ஒப்பிட்டு நோக்குகையில், பெண்பிள்ளைப் பருவம் தாண்டி மங்கைப் பருவத்தை பதின்ம வயதில் பூப்பெய்தி அடைகிறாள். பெண்பனையும் பதின்ம வயதான வடலிப் பருவத்தில், பூந்துணர்களை வெளியே தள்ளி தனது பால் வேறு பாட்டினை அடையாளப்படுத்துகிறது.

பனையின் அதிக பயன்கள் உயரிய வட்டுத் தொகுதியிலிருந்து பெறப்படுவதால், அதன்மீது ஏறுவது துணிவு மிக்க, தொழில்நுட்பம் கைதேர்ந்த சிலரால் மட்டுமே இயலக் கூடியதாக உள்ளது. இதனை மேற்கொள்ளும் தொழிலாளர்கள் காலப்போக்கில் குறை வடைந்து வருவது அவதானிக்கப்பட்டடுள்ளது.

"பொறாசஸ்" எனும் தாவரவியல் பெயரைக் கொண்ட இத்தாவரத்தின் இலையான ஓலையில் இதிகாச புராணங்கள், மற்றும் தொல்காப்பியம், நன்நூல், ஐம் பெருங்காப்பியங்கள் போன்ற அனைத்து காப்பியங்களும், இலங்கியங்களும், எழுத்தாணியினால் எழுதப் பெற்றவை ஆகும்.

பனை அன்றைய வாழ்வியலுக்கு உற்ற துணையாக விளங்கியது. கல்வி, கலாச்சாரம், பண்பாடு, தொழில்கள் அனைத்தும் இதனைச் சார்ந்ததாகவே அமைந்திருந்தது. பனைத்தொழில் புரியும் குழுமத்தினர் "சாணர்குலம்" என்று அழைக்கப்பட்டனர். பனையின் பயனை பெற்றுத்தரும் இவர்களை மேன்மையுற வைக்கும் நூலான "பனை எழுபது" புலவர் கன்னிதாசனால் செய்யுள் பிரபந்தமாக 18ம் நூற்றாண்டில் இயற்றப்பெற்றது. உயரிய பனையில் மிகவும் தொழில் நுட்பத்துடன், எழுதுதற்கேற்ற ஓலையை வெட்டி வழங்குவோரை தொழில்நுட்பம் சார்ந்த பெரியவர்களாக போற்றிப் பாடிய பாடல் வருமாறு:

"தேடரிய விருமனுக்கும் தேசமதில் உள்ளோர்கட்கும்
நாடு புகழ்ந்திடக் கணக்கு நன்றாக ஒப்பமிட
நீடுபுகழ் சாணர்கள் தன் நீள் கற்பக தருவினுட
ஏடுகளைக் கொடாமல் விட்டால் எழுதரிய மாட்டாரே" (பனை எழுபது 64)

"பதினெண் புராணமுடன் பாரதமம் ராமகதை
சதிரு நன்னூல் முறைமை அகல காவியங்கள் முதல்
மதியுளதோர் சாணர்குலம் வளர்ந்தோங்கும் சாணர்குலம்
நிதிவள முண்டானால் உங்கள் நீதிவளம் உண்டாமே" (பனை எழுபது 65)

பனைமரத்தின் அத்தியாவசிய பயன்பாடுகளுள் அன்றும், இன்றும் சில:-

| தேவைகள் | அன்றைய பயன்பாடு | இன்றைய பயன்பாடு |
|---|---|---|
| விவசாயம் | விவசாய உபகரணங்கள், தளபாட ங்கள், நீர் இறைக்கும் பட்டை, ஆடு கால், துலாக் கயிறு, வாய்க்கால் பனை மரக்கொட்டு, நிலத்தடிப் பசளை, கால்நடைத் தீவனம், பயிர்ப் பாதுகாப்பு, தட்டுவம்,பிளா,உணவு, | காலநடைத் தீவனம், குல்லம் (சுளகு), பெட்டி, கடகம், எரிபொருள் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| | உறையுள், பாவனைப் பொருட்கள், எரிபொருள், | |
| கல்வி | ஏடு,பைகள்,தளபாடங்கள்,கல்விக் கூடங்கள் | தொழிற்கல்விப் பயிற்சிகள் மற்றும் உற்பத்திகள் |
| உணவு | பனங்குருத்து,பதநீர், கள், பனம் பழம்,பனாட்டு,பனங்களி,பனங் கிழங்கு, பலகாரங்கள்,பனம்பாணி, ஒடியல்பிட்டு, பனை வெல்லம், கல்லாக்காரம், ஒடியல் கூழ், வெல்லக் கூழ், வெல்லக் கஞ்சி, ஒடியல், புழுக் கொடியல், பாணிப பனாட்டு | பனங்குருத்து,பதநீர், கள், பனம் பழம், பனாட்டு, பனங்களி, பனங் கிழங்கு, பலகாரங்கள், பனம்பாணி, ஒடியல்பிட்டு, பனை வெல்லம், கல்லாக்காரம், ஒடியல் கூழ், வெல்லக்கூழ்,வெல்லக் கஞ்சி, ஒடியல், புழுக்கொடியல், பாணிப் பனாட்டு,யோகட், குளிர்கழி, கேக்,சொக்லெற் |
| மருத்துவம் | கல்லாக்காரம், பனைவெல்லம், பனைவேர், பனம்பாணி, இலேகி யங்கள்,சூரணங்கள், குடிநீர்பிளா, பூச்சிகொல்லி, மர எண்ணை. | கல்லாக்காரம்,பனைவெல்லம், பனைவேர்,பனம்பாணி, இலேகியங்கள், சூரணங்கள் |
| ஏனைய பொது நன்மைகள் | மழை வீழ்ச்சி, நிலத்தடி நீர் சேமிப்பு, இராசாயனத் தாக்கமற்ற ஊட்டம்மிகு உணவு, பாதுகாப்பு அரண், உயிர் வேலி, சுற்றுச் சூழல் பாதுகாப்பு, பறவைகள் வாழ்விடம் | மழை வீழ்ச்சி, நிலத்தடி நீர் சேமிப்பு,இராசாயனத் தாக்கம் அற்ற ஊட்டம்மிகு உணவு, பாதுகாப்பு அரண், உயிர்வேலி, சுற்றுச் சூழல் பாதுகாப்பு, |

பனைமரத்தின் வரலாறில் பல நூல்கள் பனையின் பாகங்களின் நேரடி மற்றும் மறைமுக நன்மைகளை குறிப்பிட்டு எழுதப்பட்டுள்ளன. அவற்றுள் சில:

| பனைசார் நூல்கள் | எழுதியோர் | நாடு |
|---|---|---|
| தாலவிலாசம் | குடந்தை அருணாசலம் | இந்தியா |
| தாலவிலாசம் | சோமசுந்தரப் புலவர் | இலங்கை |
| பனை எழுபது | புலவர் கன்னிதாசன | இந்தியா |
| பனைத்தொழில் | இரா சம்பந்தன் | இந்தியா |
| பனையியல் | பாக்கியநாதன் | இலங்கை |
| பனைச்செல்வம் | கலாநிதி சு.மோகனதாஸ் | இலங்கை |
| | வி.ஜி.தங்கவேல் | இலங்கை |
| பனைப் பாட்டு | இரா.பஞ்சவர்ணம் | இந்தியா |

"தாலவிலாசம்" இரண்டும் செய்யுள் பிரபந்தமாக, பனையின் பயனையும், பனை எழுபது ஓலைச்சுவடியில் செய்யுளாக எழுதப்பட்டதும், கருப்பொருளாக பனையில் ஏறித் தொழில் புரியும் சாணர் குல வீரத்தினை பாராட்டி கூறுவதாகவும், "பனைத் தொழில்", பனைசார் பாகங்களின் தொழிலையும், "பனையியல்" பனைசார் போசணைக் கூறுகள், தொழில்கள், ஆராய்ச்சிகள், போன்ற ஆய்வு ரீதியான உண்மைகளை புலப்படுத்துவதாகவும், "பனைச் செல்வம்" பொதுப்பயனை உள்ளடக்கியதாகவும் கடதாசியில் அச்சிடப்பட்டு, நூலாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியிடப்பட்டுள்ளது.

பனையின் வரலாற்றில் அரசு, அரசுசார்பற்ற பனைசார் சபைகள், வாரியங்கள், கூட்டுறவு அமைப்புக்கள், நிறுவனங்கள், என்பன பனைவள பயனை மக்கள் மத்தியில் எடுத்துச் செல்கின்றன. இவைகளூடே, பனைமர நடுகை, பனைப் பாதுகாப்பு, பனைசார் தொழில் விருத்தி, பனை ஆராய்ச்சிகள் என்பன முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இலங்கையில் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் பனையின் சாற்று உற்பத்தியினை மேற்கொள்ளும் தொழில் வல்லுனர்களை அங்கத்தவர்களாக இணைத்து, அவர்களின் வாழ்வாதார மேம்பாட்டிற்கும், சாற்று உற்பத்திகளின் தொழில் வாயிலான மேம்பாட்டினையும் முன்னிறுத்தி செயற்பட்டுக் கொண்டிருக்கின்றன.

பனை அபிவிருத்திச் சபை அமைச்சின் ஆணையுடன், பனைவளம் தொடர்பான சகல விடயங்களையும் முன்னிறுத்தி அபிவிருத்திச் செயற்பாட்டினை ஓகஸ்ட் 1978 ஆம் ஆண்டு முதல் மேற்கொண்டு வருகிறது.

இலங்கையில் வடக்கு கிழக்கு மாகாணங்களில் தமிழர் வாழ் நிலங்களில் அதிகமாக பனை காணப்படுகின்றது.

## பனைமரப் பரம்பல்

| மாவட்டம் | எண்ணிக்கை |
|---|---|
| யாழ்ப்பாணம் | 3,500.000.00 |
| கிளிநொச்சி | 3,500,000.00 |
| முல்லைத்தீவு | 300,000.00 |
| வவுனியா | 8,000.00 |
| மன்னார் | 3.000,000.00 |
| புத்தளம் | 120.000.00 |
| திருகோணமலை | 312.000.00 |
| மட்டக்களப்பு | 200.000.00 |
| அம்பாறை | 40.000.00 |
| ஹம்பாந்தோட்டை | 20,000.00 |
| அநுராதபுரம் | 40,000.00 |
| | 11.040.000.00 |

**பனைசார் தொழில்கள் இரண்டாகப் பிரிக்கப்பட்டுள்ளன.**

01. உணவுசார் உற்பத்திகள் 02. உணவுசாரா உற்பத்திகள்

### உணவுசார் உற்பத்திகள்

உணவுசார் உற்பத்திகள் யாவும், அன்றைய காலத்தில் நேரடியாக உண்ணப்பட்டு வந்தது. காலப்போக்கில் மாற்றம் பெற்று இன்று மக்கள் விரும்பி உண்ணும் உணவுகளில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பனைசார் மூலப்பொருட்களை சேர்த்து (பனங்களி, பதநீர் ஊடாக பெறப்படும் பனைவெல்லம், பனஞ்சீனி, கல்லாக்காரம், பனங்கிழக்கு ஊடாக பெறப்படும் ஒடியல், புழுக்கொடியல், ஒடியல்மா, புழுக்கொடியல்மா) உணவுப் பொருட்கள் தயாரிக்கப்படுகின்றன. மேற்படி மூலப் பொருட்களில் நோயற்ற வாழ்வுக்குத் தேவையான போசணைக்கூறுகள் அதிகம் உள்ளன.

தொழிற்சாலைகளை அமைத்து, இயந்திரங்களைப் பயன்படுத்தி, உரிய முறையில் உற்பத்திகளை மேற்கொள்ள முயன்றால் பலருக்கு தொழில் வாய்ப்பினை வழங்குவதுடன், பனைவளப் பயன்பாட்டின் வழியில் தேசிய வருமானத்தையும் அதிகரிக்க முடியும்.

## உணவுசாரா உற்பத்திகள்:

பனையின் பாகங்களை மூலப் பொருளாகக் கொண்டு உற்பத்தி செய்யப்படுபவை. ஓலை, ஈர்க்கு, நார், மட்டை, பன்னாடை, கொக்காரை, பாளை, கங்குமட்டை, மரம், வேர் என்பன உற்பத்திக்குரிய மூலப்பொருட்கள் ஆகும்.

மரத்திலிருந்து மரத் தளபாடங்கள், வீட்டுக்கூரைக்குரிய மரங்கள், அலங்காரப் பொருட்கள் என்பன உற்பத்தி செய்யப்படுகின்றன. கங்குமட்டையிலிருந்து பனந்தும்பு உற்பத்தி செய்யப்படுகின்றது. இத்தும்புகள் தூரிகை உற்பத்திக்கும், கழிவுகள் மெத்தைக்கும் பயன்படுத்தப்படுகின்றது.

ஏனைய அனைத்தும் (ஓலை, ஈர்க்கு, நார், மட்டை, பன்னாடை, கொக்காரை, பாளை) பனங்கைப்பணித் தொழில் உற்பத்திக்கு மூலப்பொருட்களாகப் பயன்படுகின்றது. பனைசார் தொழில்களுள் சாற்று உற்பத்தி தவிர்ந்த ஏனைய உற்பத்திகளுள் பனங்கைப்பணி முதன்மை பெறுகிறது. இத்தொழில் அதிக பெண்கள் மேற்கொள்ளும் தொழிலாக காணப்படுகின்றது. பாரம்பரியமாகவும், பிரதேசத் தொழிலாகவும் மேற்கொள்ளப்பட்ட பனங்கைப்பணி, இன்று ஏற்றுமதித் தொழிலாகவும், பெண்களின் சுயதொழிலாகவும் பரிணமித்து உள்ளது. தமது அன்றாடப் பணியுடன் பகுதிநேரத் தொழிலாக பனங்கைப்பணியினை மேற்கொள்ளுவோர் மாதாந்தம் ரூபா 20,000/- ஐ வருமானமாகப் பெறுகின்றனர்.

மேற்படி தொழில்களை அங்கீகரிப்பதற்கும், பனைவள அபிவிருத்திக்கான இடர்பாடுகளை தீர்த்து, விஞ்ஞான ரீதியான நல் முடிவுகளை ஆராய்ச்சிகளின் ஊடாக மக்களிற்கு வழங்குவதற்குமாக, பனை அபிவிருத்திச் சபையால் 2012 ஆம் ஆண்டு புனரமைப்புச் செய்யப்பட்டு பனை ஆராய்ச்சி நிறுவனம் நிறுவப்பட்டுள்ளது.

பனைசார் உற்பத்திகளின் போசணைக் கூறுகள், பாதுகாப்பான உற்பத்தி முறை, தொழிற்சாலைகளுக்கான வரையறைகள், மக்கள் விரும்பும் உணவுகளில் பனைசார் உணவுகளை உள்ளீர்த்து செய்யும் முறை, பொதி செய்தல், பாதுகாத்தல், பனையில் பெறப்படும் முழுப்பயனையும் மக்களுக்குச் சென்றடைவதற்கான ஆராய்ச்சிகள் ஆய்வுகூடங்களில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சுயதொழிலாளர்களின் உற்பத்திகளுக்குரிய தரச் சான்றிதழ் **(ISO)** வழங்குவதற்குரிய அங்கீகாரம் இவ் ஆராய்ச்சி நிறுவனத்திற்கு 2018 ஆம் ஆண்டு கிடைக்கப்பெற்றுள்ளது.


இலங்கையின் தேசிய உற்பத்தியில் குறிப்பிட்ட அளவு பங்களிப்புச் செய்யும் பனைசார் கைத்தொழிலை புத்தாக்கமடைய தொழில்நுட்ப மாற்றத்தினூடாக அபிவிருத்தி செய்தல், மேம்படுத்தல், பிரபல்யப்படுத்தல், நிலைபேணுடையதாக சீராக்குதல் மற்றும் பேணக்கூடிய ஆராய்ச்சிகளை சீராக்குதல் என்பன இந் நிறுவனத்தின் பணிக்கூற்றாகும். இதுவரை முப்பதுக்கும் மேற்பட்ட ஆராய்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தொடர்ந்தும் பனைசார் உற்பத்திகளை அதிகரித்து தொழில் வாய்ப்புக்களை ஊருவாக்கி,பொருளாதார ரீதியில் மக்களை முன்னேற்றுவதற்கு,பனை அபிவிருத்திச் சபை பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பனையே வாழி!

சி.வி.நந்தன்
அச்சுவேலி




பனை மரங்கள் நமது மண்ணில் பரக்க வேண்டும்
பனை வளத்தால் நமது குடி சிறக்க வேண்டும்
உயர்வென்றும் தாழ்வென்றும் தொழிலை நோக்கி
கெட்டொழிந்து போனதையா எங்கள் வாழ்வு
பெருஞ்செல்வப் பேறு தரும் பனைகள் பாரீர்
நன்குணர்ந்து இதன் வளத்தில் குளிப்போம் வாரீர்
பேரீஞ்சால் பிற நாடு செழித்தது போல்
பனை வளத்தால் நம் மண்ணும் செழிக்கும் உண்மை
பல்லோரும் பனைத்தொழிலில் வல்லோர் ஆனால்
பல் உலகும் பனம் பொருட்கள் பறக்கும் கேளீர்
பனையென்றால் அன்றிருந்த பல் இழிப்பு
தினை அளவாய் மாறுதடா இன்று இங்கே
அடியிருந்து நுனி வரையும் பயனைக் கொட்டும்
பனையெங்கள் வீடுவளவெங்கும் வேண்டும்
பனை உயர்ந்து செல்கின்ற நிலையைப்பார்த்தால்
வெகுவிரைவில் பனைக்கெனவோர் அமைச்சு வேண்டும்
புதிதான நோய்களுக்கு இலட்சம் கொட்டும்
மானிடரை பனைபார்த்து சிரிக்குதம்மா
ஆதியிலே நம்மவர்நோய் நொடிகளின்றி
வீதியிலே நடந்ததனை ஆய்வோமானால்
விளங்கிடுமே பனையிதனின் பண்டம் பற்றி
இதை உணர்ந்தால் கேடுவருமோ சொல்லீர்
எமதுவுயர் பண்பாடும் பனையில் தோய்ந்து
சூழலெல்லாம் பனைமயமாய் தோன்ற வேண்டும்
பனையெமக்கு தரும் வரங்கள் ஒன்றா இரண்டா
கண்கண்ட தெய்வமன்றோ பனையெம் மண்ணில்
பரந்திருக்கும் வெளிகளெல்லாம் பனைகள் நாட்டி
உயர்ந்தகுடி தமிழர் என்ற பெயரைக் கேட்போம்
ஏன் வளர்ந்தாய் பனை மரமே என்று கேட்டால்
பனைபயனை சொல்லப்பத்து வருடம் வேண்டும்
அத்தனையாய் பனம்பயன்கள் நீழும் கூடி
புலவர்களும் இதை வியந்து நின்றார் பாடி
புது யுகத்தில் எம் பனையைப் புதுமையாக்கி
புதிதுபுதிதாய் சாலை செய்ய வேண்டும்
இளையவர்கள் முதியோரின் புத்தி கேட்டு
காலமிதற் கேற்றபடி மாறவேண்டும்
பனையுயர்ந்து செல்வதுபோல் எங்கள் வாழ்வும்
வானுயர வழிபிறக்கும் பனையே வாழி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "பனை மான்மியம்" -2019 நிகழ்வில் கௌரவிக்கப்படும் சங்கங்களின் சிறந்த அங்கத்தவர்கள்



திரு தி.குணசிங்கம்
சுன்னாகம் பனை தென்னை
வள அபி. கூட்டுறவுச் சங்கம்



திரு ம.ரஜனிகாந்
அச்சுவேலி ப.தெ.வ.
அ.கூ.சங்கம்



திரு சி.சிவனேஸ்வரன்
அரியாலை ப.தெ.வ.
அ.கூ.சங்கம்



திரு அ.யேசுராசா
சங்கானை ப.தெ.வ.
அ.கூ.சங்கம்



திரு ஜெ.ஜெசிதன்
ஊர்காவற்றுறை ப.தெ.வ.
அ.கூ.சங்கம்



திரு மு.பரமேஸ்வரன்
காரைநகர் ப.தெ.வ.
அ.கூ.சங்கம்



திரு அ.ரகுநாதன்
பருத்தித்துறை ப.தெ.
வ.அ.கூ.சங்கம்



திரு த.சுபாஸ்கரன்
வடமராட்சி கிழக்கு ப.தெ.
வ. அபி. கூ.சங்கம்



திரு வ.தெய்வேந்திரம்
சாவகச்சேரி ப.தெ.வ.
அ.கூ.சங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பனையும் பயனும் அல்லது பனையும் வாழ்வும்

திரு இ.கோகுலராகவன்
யா/ சிறீ. சோமஸ்கந்த
இந்து ஆரம்ப பாடசாலை

**"நட்டாயிரம் பட்டாயிரம்"**

இந்தப் பழமொழி மட்டும் போதும் பனை மரத்தின் மகத்துவத்தை தெளிவாக உணர்ந்து அதன் பெருமையை பறைசாற்ற உதவும் சான்றாகும். இதில் பனைமரம் மண்ணில் ஆயிரம் வருடங்கள் நிலைத்திருக்கும் என்ற கருத்து முன்வைக் கப்படுகின்றது. இது எடுகோளாக கூறப்பட்டாலும் பனையின் ஆயுட்காலம் நூறு வருடங் களுக்கு மேல்தான். பனைவளை வீடு கட்ட உபயோகப்படுத்தப்படும்போது மழை, வெயில் படாமல் காக்கப்பட்டால், 200 வருடங்களுக்கு குறையாமல் வீட்டில் உபயோகப்படும். இதனை ஏற்றிச் சொல்லும் பழமொழியே அது எனலாம்.

பனைமரம் ஆபிரிக்காவில் இருந்தே ஏனைய நாடுகளுக்கு பரவியதாக அறிய முடிகின்றது. ஆபிரிக்காவில் இருந்து குடிபெயர்ந்த மனிதர்கள் தாம் சென்று குடியேறிய அனைத்து பிரதேசங்களிலும் பனம் விதையை எடுத்துச்சென்று நாட்டினார்கள் என்று அறிய முடிகிறது. இதற்கு சான்றாக மக்கள் குடியிருப்புக்களுக்கு அண்மையில்தான் பனை மரங்களை அதிகம் காணமுடியும். பெருங்காடுகளில் பனை மரங்களை காண முடியாது.

பனையில் 30க்கு மேற்பட்ட வகைகள் காணப்படுகின்றன. இதனை இலகுவில் இனம் பிரித்து காண்பது கடினம். ஆனால் ஓலையின் அளவு, நுங்குகளின் நிறம் மூலம் மாறுபட்ட பல வகை பனைகளை சாதாரணமாக பார்த்துக்கொள்ள முடியும். ஆனால் இவை வகை பிரித்து அழைக்கப்படுவது கிடையாது.

இலங்கையின் வடமாகாணம் பனைமரங்கள் அதிகம் நிறைந்த மாகாணமாக காணப் படுகின்றது. ஆனால் துரதிஸ்ரமாக பனை சார்ந்த அடிப்படை பொருளாதாரம் ஒன்றை கட்டியெழுப்ப தவறிவிட்டவர்களாகவே வடமாகாண மக்கள் காணப்படுகின்றார்கள்.

பனை தானாக வளரக்கூடிய மரம். 15 வருடங்களில் பயன்தரத் தொடங்கும். ஒரு பருவத்துக்கு பனையில் இருந்து 1500 லீற்றர் பதனீர் உற்பத்தி செய்ய முடியும். இதுவே பனையின் உச்சப்பயன் எனலாம். அதுதவிர பனை ஓலை, பனம் மட்டை மற்றும் பன்னாடை, வளைமரம் போன்றவையும் மிக முக்கியமான மூலப்பொருட்கள்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடமாகாணத்தில் தென்னந்தோப்புக்கள் போல பனந்தோப்புக்கள் உருவாக்கப்படவில்லை என்பது எமது வரலாற்றுத் தவறாகும். இதன் நோக்கம் எண்ணி உற்று நாம் உணராததே இதன் அடிப்படை தவறாகும். 1000 பனைகள் கொண்ட தோப்பை உருவாக்கி, வைத்துக்கொண்டால் வருடம் கிட்டத்தட்ட 1500000 லீற்றர் பதனீர் உற்பத்தி செய்ய முடியும். இதிலிருந்து கிட்டத்தட்ட 50000 கிலோ பனை வெல்லத்தினை உற்பத்தி செய்ய முடியும். இதன் பெறுமதி 1கிலோ பனை வெல்லம் ரூபா 800.00 வரை விற்கப்படுகின்றது. எனவே கணக்கை பாருங்கள் - கிட்டத்தட்ட 40 கோடி ரூபாவிற்கு மேல். ஆச்சரியமாக இருந்தால் செய்து பாருங்கள். 15 வருட முயற்சி உற்பத்தி செலவு ஏதுமில்லை. இது எமது பொருளாதாரத்தை எவ்வளவு வலுப்படுத்தும் என்பதை நாம் இன்னும் பொருட்படுத்தவில்லை.

தற்போது யாழ்ப்பாணம் உட்பட இலங்கை முழுவதும் மலேசியன் தீராந்தி மரங்கள் இறக்குமதி செய்யப்படுகின்றன. சரி உள்நாட்டு பனைமரம் பாதுகாக்கப்படுகின்றது என நன்றி கூறிக்கொள்வோம். ஆனால் மறுவளத்தில் எமது பணத்தை வேறு நாட்டுக்கு ஏற்றுமதி செய்துகொண்டு இருக்கின்றோம் என்பதே உண்மை. பனை மரத்தின் வைரப் பகுதியை நாம் மிக நீண்ட காலமாக வீடு கட்டும் வளை, கைமரம், சலாகையாக பயன்படுத்தி வருகின்றோம். தற்போது போரால் 10 இலட்சத்துக்கு அதிகமாக பனைகள் அழிக்கப்பட்டதால் பனைமரம் தறிக்கப்படுவது முறையான அனுமதி மூலம் தடுக்கப்பட்டு இருக்கின்றது. போர் முடிந்து பத்து வருடங்களாகிவிட்டது. ஒரு பனைமரத்தின் வைரப்பகுதி இருபது வருடத்தின் பின் பயன்தர வல்லது. எனவே பல பனந்தோப்புக்களை உருவாக்கி இந்த தேவையை பூர்த்தி செய்திருக்க முடியும் செய்யலாம். பனைமரம் தென்னை போலல்லாது நான்கு அடி இடைவெளியில் நாட்டப்படக்கூடியது. நடுவது தவிர வேறெந்த பராமரிப்பும் அற்றது. மாடு தின்றாலும் வளரும், ஆடு தின்றாலும் வளரும்.

எமது பகுதியில் பெருமளவு கடற்கரைகள் வெறும் தரவையாக காணப்படுகின்றன. ஒரு உழவு இயந்திரத்தில் பனம் விதையை ஏற்றிச்சென்று எறிந்துவிட்டு வந்தாலும் தானாக முளைத்து விடும். கடற்கரையும் அழகாகிவிடும். பனையும் பயன்தரத் தொடங்கியும் விடும்.

இது நீண்டகால நோக்கில் செய்யப்பட வேண்டியது. எமது மக்கள் யோசிக்க வேண்டியதும்கூட. பனையை கைவிட்டால் வடமாகாணம் வறட்சியிலும், பொருளாதார நலிவிலும் பாதிக்கப்படும் என்பது கணிப்பாகும். பனையை எமது செல்லப்பிள்ளையாக்க வேண்டியது கட்டாயம் எனலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "பனை மான்மியம்" –2019 நிகழ்வில் கௌரவிக்கப்படும் சங்கங்களின் சிறந்த அங்கத்தவர்கள்



திரு இ.கஜேந்திரன்
வேலணை ப.தெ.வ.
அ.கூ.சங்கம்



திரு க.சிவசிறீ
முல்லைத்தீவு தெற்கு ப.தெ.வ.
அ.கூ.சங்கம்



திரு பி.விஜயச்சந்திரன்
முல்லைத்தீவு மேற்கு ப.தெ.வ.
அ.கூ.சங்கம்



திரு த.ராஜ்குமார்
முல்லைத்தீவு கிழக்கு ப.தெ.வ.
அ.கூ.சங்கம்



திரு ம.கெல்மன்
முல்லைத்தீவு வடக்கு ப.தெ.வ.
அ.கூ.சங்கம்



திரு ந.ரவீந்திரராசா
விசுவமடுக்குளம் ப.தெ.வ.
அ.கூ.சங்கம்



திரு அ.ஸ்ரீபன்
புதுக்குடியிருப்பு ப.தெ.வ.
அ.கூ.சங்கம்



திரு சி.துஷ்யந்தன்
ஒட்டுசுட்டான் ப.தெ.வ.
அ.கூ.சங்கம்



திரு ச.பிரபாதரன்
பாண்டியன்குளம்/துனுக்காய்
ப.தெ.வ.அ.கூ.சங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு சு. செபஸ்தியாம்பிள்ளை,
பொதுமுகாமையாளர் ப.தெ.வ.அ.கூ.சங்கம்,
புதுக்குடியிருப்பு.

# அமிர்த விருட்சமே வாழி!

விண்ணை முட்டிடும் வேகம்
வீரம் வளர்க்கும் முன் தேகம்
வியக்க வைக்கும் ஈகை
விஞ்சிட யாருளர் பாரில்

அடி முதல் நுனிவரை
அமிர்த மழை பொழிவாய்
அண்டிப் பிழைப்போரை
ஆற்றுப் படுத்தியே தீர:வாய்

கட்டுக்கடங்கா உன்
கரிய கட்டுடல்
காண்போரை கவர்ந்திரும்
காந்த இரும்புடல்

ஆணாகிப் பெண்ணாகி
ஆமிர்த கரைசலும் நீயாகி
அழியாத பொருளாகி
அருள்பெறு சொத்தானாய்

மாண்டாலும் மறைந்திடா
மாணிக்கம் நீயென்னேன்
மானிடர் வாழ்விலே
மறைந்திடா கிரீடம் நீயென்பேன்

காய் தருவாய் கனிதருவாய்
கள்ளும் நீ தருவாய்
களைப்பை போக்கி தீர்ப்பாய்
கருப்பட்டி கருப்பணி தந்திடுவாய்
கடும் பிணியும் போக்கி வைப்பாய்

எழுத்தாணி பதித்திடவே
ஏற்ற ஏடாக நீயிருப்பாய்
எழுத்தாளர் கைகளிலே
ஏந்தும் பொக்கிசம் நீயல்லவே

வீடு வேய ஓலை தருவாய்
விசிறியாய் மாறி சுகம் தருவாய்
பெட்டியும் நீயாவாய்
பெட்டகத்தில் கொட்டப் பெட்டியாய்
பொக்கிசங்கள் நீ காப்பாய்

காராளர் களத்திலே
துல்லமாய் மாசகற்றிடுவாய்
சிறுவாயனாய் நீ மாறி
பெரும் வேலைகள் செய்திடுவாய்

பந்தியிலும் நீயிருப்பாய்
சந்தியிலும் தான் இருப்பாய்
பாவேந்தர் சபை தனிலே
முந்தியிருப்பதும் நீயன்றோ

ஓலையில் பாய் தருவாய்
சோலையிலே காதல் காப்பாய்
சோம பானமும் நீ தருவாய்
சோரம் போகா விருட்சம் நீயேதான்

மட்டையிலே தும்படிப்போம் -பனங்
கொட்டையிலே பந்தடிப்போம்
கொற்றவனும் போற்றி நிற்பான்
உற்றவனும் உயர வைப்பான்

இயற்கை தந்த பொக்கிசம் நீ
இணையிலா கற்பகம் நீ
இன்னுயிர்கள் காத்திடுவாய்
இங்கு புகழோடு வாழ்ந்திடுவாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமதி சிவறஞ்சினி சிறீகாந்,
B.Com, M.Com, Dip. In Education
ஆசிரியர், யா/வசாவிளான் மத்திய கல்லூரி

# நிலைபேறான அபிவிருத்திக்கு வணிகங்களின் பங்களிப்பு

நிலைபேறான அபிவிருத்தி என்பது எதிர்கால பரம்பரையினரின் தேவைகளை நிறைவு செய்வதற்கு இருக்கின்ற உரிமையினைப் புறக் கணிக்காது நிகழ்காலத் தேவைகளை அடைந்து கொள்வதற்கான அபிவிருத்தியாகும்.

நிலைபேறான அபிவிருத்தி மூன்று சமமான பிரதான கோபுரங்களின் அடிப்படையிலேயே கட்டி எழுப்பப்படுகின்றன. அவை,

1. பொருளாதார நிலைபேறான அபிவிருத்தி ( Economic Sustainable Development)
2. சூழ்நிலை பேறான பாதுகாப்பு (Environment Sustainable protection)
3. சமூக நிலை பேறான அபிவிருத்தி (Social Sustainable Development)

## பொருளாதார நிலைபேறான அபிவிருத்தி ( Economic Sustainable Development)

பாரம்பரிய பொருளாதார அபிவிருத்தி என்பது மொத்த தேசிய உற்பத்தியின் அதிகரிப் பாகும். நிலைபேறான பொருளாதார அபிவிருத்தியின்போது வளப் பயன்பாட்டினைக்குறைத்து வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்துவதன்மூலம் மனிதநலனை மேம்படுத்துவதற்கு எதிர்பார்க்கப் படுகின்றது. உலகிலுள்ள அனைத்து மக்களினதும் வறுமையைப் போக்குதல், உயர் வாழ்க் கைத் தரத்தை உறுதிப்படுத்துதல் என்பவற்றின் மூலம் நிகழ்கால, எதிர்கால பரம்பரையினரின் தேகாரோக்கியம் மற்றும் பாதுகாப்பினை வழங்கல் பொருளாதாரச் செயற்பாட்டில் ஈடுபட்டு செல்வத்தை ஈட்டிச் சிறந்த வாழ்க்கைத் தரத்தினைப் பெற்றுக்கொள்வதற்கு மக்களைப் பலப் படுத்தல் இங்கு முக்கியமானதாகும். இதற்காகப் போட்டிச் சந்தை தேவைப்படுவதுடன் அனை வராலும் ஏற்றுக்கொள்ளக்கூடிய விலைக்கு சூழலை நேசிக்கக்கூடிய உற்பத்திகளை உருவாக்கு வதன்மூலம் நிலைபேறான பொருளாதார அபிவிருத்தியினை அடைந்துகொள்ள எதிர்பார்க் கப்படுகின்றது. அதாவது பனைசார் உணவுப் பொருட்கள், கைவினைப் பொருட்கள், அழகு சாதனப் பொருடக்ள் என்பனவும் இதற்குள் அடங்குகின்றன.

## நிலைபேறான சூழல் பாதுகாப்பு (Environment Sustainable protection)

நாம் வாழும் புவியில் வரையறுக்கப்பட்ட வளங்களே காணப்படுகின்றன. புவியில் வாழும் எல்லோருக்கும் சுத்தமான காற்று, நீர், வசிப்பதற்கு பொருத்தமான பூமி மட்டுமன்றி தேவையான அளவில் உணவினை உற்பத்தி செய்வதற்கு வளமான நிலமும் காணப்படல் வேண்டும்.

மனிதனின் அடிப்படைத் தேவைகளாகிய காற்று, நீர், உணவு, வீடு என்பன தரமானதாக் காணப்படுவதுடன் அவற்றைப் பாதுகாத்துப் பேணிச் செல்வதன்மூலம் மனித னின் அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்தல் சூழல் நிலைபேறான பாதுகாப்பின் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூழல் நிலைபேறான பாதுகாப்பின்போது இயற்கைச் சூழலை அழிக்காது வினைத் திறனான மாற்றங்களை எவ்வாறு செய்வது என்பது தொடர்பில் கவனம் செலுத்தி எதிர்காலச் சமூகத்தின் சார்பாக பூகோளச் சூழலை பாதுகாப்பதற்கான மானிடச் செயற்பாடுகள் எதிர்பார்க் கப்படுகின்றன. அவ்வாறாயின் நிகழ்காலத்தில் மேலெழுந்துள்ள புவி வெப்பநிலை அதி கரிப்பு, காடழிப்பு, பனை அழிப்பு, சமுத்திரங்களின் வரையறைகள் பேணாது மீன்பிடித்தல் போன்ற பாதகமான விளைவுகள் தொடர்பாகக் கவனம் செலுத்துதல் வேண்டும்.

மனித தேவைகளை நிறைவு செய்வதற்கான இயற்கை வளங்களை சூழலிருந்து பெற்றுக்கொள்ளல் வேண்டும். அதற்கு பனை மரங்கள் பண்ணை முறையில் நாட்டப்படுதல் வேண்டும். இங்கு மீள உருவாக்க முடியாத வளங்களை மீள் உற்பத்தி செய்வதற்கு இயற்கை நிலத்திற்கு உள்ள ஆற்றலைவிடக் குறைந்த வேகத்தில் மனிதன் அவற்றைப் பயன்படுத்துவதி னூடாக நிலைபேறான சூழலைப் பாதுகாக்க முடியும்.

## நிலைபேறான சமூக அபிவிருத்தி (Social Sustainable Development)

நிலைபேறான எதிர்காலமொன்றை உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டுமாயின் மக் களின் தேவைகள் சமமானதாகவும், நியாயமான வகையிலும் பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருத்தல் வேண்டும். அவ்வாறாயின் மனித தேவைகள், விருப்பங்களை உயர்வான நியமங் களுடன் அடையக்கூடியதாக இருப்பதுடன் ஏனையோர்கள் அவ்வுரிமையினை அழிக்காது அல்லது புறக்கணிக்காது இருத்தல் வேண்டும். நிலைபேறான சமூக அபிவிருத்தி இந்நிலை மையினை உறுதிப்படுத்துவதற்கு சமத்துவநிலை, சமூக மூலதனம், சமூக ஒன்றிணைப்பு, மக்கள் பங்களிப்பு மற்றும் அபிவிருத்தி, மனித உரிமைகள், சமூகப்பொறுப்பு, சமூக நியாயம் போன்றவற்றை சமூகத்திலுள்ள சகலருக்கும் பெற்றுக்கொடுப்பது தொடர்பில் அதிக கவனம் செலுத்துதல் வேண்டும். கூட்டுறவு நிறுவனங்கள் இதனை ஓரளவு நிறைவேற்றுவதை அவ தானிக்க முடிகின்றது. எதிர்காலப் பரம்பரையினரின் தேவைகள் மீறப்படாதவாறு நிகழ்கால தேவைகளை நிறைவு செய்வதனூடாக மனித அபிவிருத்தியினை ஏற்படுத்துவது நிலை பேறான சமூக அபிவிருத்தியின் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது.

வணிகமொன்று பொருளாதாரம் நிலைபேறானது என்பதை உறுதிப்படுத்துவதற்கு மேற்கொள்ள வேண்டிய கருமங்களில் சில பின்வருமாறு :

- வேலைவாய்ப்புக்கள் உருவாக்கல்.
- திறன்களைப் பலப்படுத்தல்.
- வளங்களை வினைத்திறனாகப் பயன்படுத்துதல்.
- மூலதனத்தை வினைத்திறனாகப் பயன்படுத்துதல்.
- இடர் முகாமைத்துவம்.
- பொருளாதார விருத்திக்கு உரமூட்டல்.
- பங்குதாரர்களின் அனுகூலங்களை விருத்தி செய்தல்.
- உள்நாட்டு பொருளாதார விருத்திக்கான முதலீடு.
- புத்துருவாக்கங்களை அறிமுகப்படுத்தல்.
- தொழில்நுட்பத்தை விருத்தி செய்தல்.
- நிறுவனத்தின் உட்கட்டமைப்பு வசதிகளின் விருத்திக்கு பங்களிப்புச் செய்தல்.
- ஊழியர் நலநோன்புகள்.
- பரிமாற்றம் மற்றும் கொடுக்கல் வாங்கல் செயற்பாடுகளை விருத்தி செய்தல்.
- உற்பத்தி செயன்முறைகளை ஊக்குவித்தல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### சூழலின் நிலைபேறான தன்மைக்கு வணிகங்களின் பங்களிப்பு

நிலைபேறான அபிருத்தியை அடைந்துகொள்வதற்காக வணிகங்கள் செயற்படும் பொழுது விசேடமாகக் கவனம் செலுத்த வேண்டிய விடயங்கள் பல உள்ளன.

- வளப்பயன்பாடு.
- மூலப்பொருள்களும் கழிவுப் பொருள் முகாமைத்துவமும்.
- இடர் முகாமைத்துவம்.
- இயற்கையானதும் கலாசார உரிமைகளைப் பாதுகாத்தலும்.

வணிகமானது சூழல் நிலைபேறான தன்மை கொண்டுள்ளது என்பதனை உறுதிப் படுத்துவதற்கு மேற்கொள்ள வேண்டிய செயற்பாடுகள் பல உள்ளன.

- சூழல் நேயப் பொருட்களைக் கொள்வனவு செய்தல்.
- உற்பத்தி நடவடிக்கைகளின்போது மூலப்பொருட்கள், வலு, நீர் போன்ற வளங்களைப் பாதுகாத்து கருமமாற்றுதல்.
- கழிவுப்பொருள் முகாமைத்துவத்தின் போது 3R, 4R, 5R எண்ணக்கருக்களைப் பயன்படுத்துதல்.
- சூழல் நேயப் போக்குவரத்து முறைகளைப் பயன்படுத்துதல்.
- நீர், காற்று, மண் போன்றவற்றின் மாசடைதலைக் குறைத்தல்.
- உயிரினங்களின் பல்லினத் தன்மையைப் பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுத்தல்.
- சூழல் சட்ட திட்டங்களுக்கமைய கருமமாற்றுதல்.
- சூரியசக்தி போன்ற சூழலுக்கு தீங்கிழைக்காத வலுச் சக்திகளைப் பயன்படுத்தல்.

### சமூகக் கலாசார நிலைபேறான தன்மைக்கு வணிகங்களின் பங்களிப்பு

வணிக நிறுவனங்கள் சமூக கலாசார நிலைபேறான நன்மைகளை உறுதி செய் வதற்கு கருமமாற்றும் பொழுது கவனம் செலுத்த வேண்டிய விடயங்கள் பல காணப்படு கின்றன.

- மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தல்.
- மக்களுக்கு சமமான சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக் கொடுத்தல்.
- சமூக ஓரினத் தன்மையை ஏற்படுத்தல்.
- சர்வதேச ஒத்துழைப்புக்களைப் பெற்றுக்கொள்ளல்.
- மனித மூலதனத்தைப் பராமரித்தல்.
- தேசிய கலாசாரச் சம்பிரதாயங்களையும் நடை, உடை, பாவனை என்பவற்யையும் பாதுகாத்தல்.
- கலாச்சாரச் சூழலைப் பாதுகாத்தல்.
- வறுமை நிலையை இழிவுபடுத்துவதற்குக் கருமமாற்றல்.
- ஊழியர் தொடர்பு.

### வணிகமானது சமூக கலாசாரம் நிலைபேறானது என்பதனை உறுதி செய்வதற்கு மேற்கொள்ள வேண்டிய நடைமுறைகள்

- மானிடப் பல்லினத் தன்மைகளுக்கு மதிப்பளித்து கருமமாற்றல்.
- மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கு பங்களிப்பு செய்தல்.
- சமத்துவத் தன்மையுடன் கருமமாற்றுதலும், சமமான சந்தர்ப்பங்களை வழங்குதலும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- கல்வி, சுகாதாரம், போக்குவரத்து போன்ற அத்தியாவசியத் தேவைகளுக்கு பங்களிப் புச் செய்தல்.
- சமூகப் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு பங்களிப்புச் செய்தல்.
- பல்லினத் தன்மைகொண்ட கலாச்சாரத்திற்கு மதிப்பளித்தலும் அவற்றைப் பாதுகாப் பதற்குப் பங்களிப்புச் செய்தலும்.
- சட்டத்தையும் சமாதானத்தையும் பாதுகாப்பதற்கு பங்களிப்புச் செய்தல்.

## நிலைபேறான அபிவிருத்திக்காக வணிகங்களின் நவீன பயன்பாட்டு முறைகள்.

### நிலைபேறான தன்மைக்கான 4 R எண்ணக்கரு

- நவீன சமூகத்தின் உற்பத்தி நுகர்வு போன்ற செயற்பாடுகள் காரணமாக நாளாந்தம் அளவுக்கதிகமான கழிவுப் பொருள்கள் சேர்வதானது பூகோள ரீதியான பிரச்சினை யாக மாறியுள்ளது.
- உற்பத்தியின்போது.
- நுகர்வின்போது.

கழிவுப்பொருள் முகாமைத்துவத்தின்போது 4R எண்ணக்கரு பிரயோகத்தினூடாக நிலைபேறான அபிவிருத்தியை அடைந்து கொள்வதற்கு முயற்சி செய்வது தொடர்பாக சர்வதேச ரீதியாக அவதானம் செலுத்தப்பட்டுள்ளது. அவ் 4 R பிரதிநிதித்துவப்படுத்துவது,

- மீள் சுழற்சி (Recycle)
- மீள் பாவனை (Reuse)
- பாவனையைக்குறைத்தல் (Reduce)
- மீள் உருவாக்கம் (Rephace) ஆகிய எண்ணக்கருக்களாகும்.

### மீள் சுழற்சி (Recycle)

- கழிவுப் பொருட்களை வகைப்படுத்தி வேறுவகையான பொருளொன்றை உற்பத்தி செய்யக்கூடிய பொருளொன்றாக மாற்றுதல் இங்கு இடம்பெறும். இங்கு பொருள்களில் காணப்படும் பௌதீக நிலைமைகளில் மாற்றம் செய்யப்படும், மீள் சுழற்சியினை இரு முறைகளில் வெளியீடுகள் கிடைக்கக்கூடியவாறு மேற்கொள்ள முடியும்.
- குறைந்த பெறுமதி கொண்ட மூலப்பொருளொன்றை உயர்பெறுமானமுடைய உற்பத்திப் பொருள் எனும் நிலைக்கு மாற்றுதல் (up cycle)
- உயர் பெறுமானம் கொண்ட உற்பத்தியினைக் குறைந்த பெறுமானம் கொண்ட மூலப்பொருள் என்ற நிலைக்கு மாற்றுதல் (Low cycle)

உதாரணம் : யப்பான் பாவனையிலிருந்து ஒதுக்கப்படுகின்ற வாகனங்களை உடைத்து இரும்புகளாக மாற்றுதல்.

### மீள் பாவனை / மீண்டும் பயன்படுத்துதல் (Reuse)

உற்பத்தி நடவடிக்கையின்போது அல்லது நுகர்வுக் கருமத்தின்போது தொடர்ச்சியாக மீண்டும் மீண்டும் பாவனைக்கு எடுத்தல் இதன் பொருளாகும்.
உதாரணம்: உணவுப்பொதி செய்யும் (lunch sheets) பொலித்தீன்களுக்குப் பதிலாக உண வுப் பெட்டியினைப் (lunch Box) பயன்படுத்தல்.

### பாவனையைக் குறைத்தல் (Reduce)

சூழலில் அகற்றப்படும் கழிவுப்பொருள்களின் அளவினை இழிவுபடுத்துவதே இதன் கருத்தாகும். உற்பத்தி அல்லது நுகர்விற்காகப் பயன்படுத்தப்படுகின்ற பொருட்களில் அகற்றப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படும் பொருள்களின் அளவினைக் குறைப்பதன்மூலம் இக்கருமத்தை இலகுபடுத்தலாம். அதேபோன்று சூழலைப் பாதிக்கக்கூடிய பொருட்களை நீக்குதல், நிராகரித்தல், பயன்படுத்தா திருத்தல் என்பவற்றின்மூலம் நிலைபேறான அபிவிருத்திக்குப் பங்களிப்புச் செய்யலாம்.

உதாரணம்: பொதியொன்றின் பொதியிடலுக்காக அழிவடையாத பொலித்தீன்களைப் பயன்படுத்தாதிருத்தல்.
சுத்தமான நீரினை பிளாஸ்ரிக் பொதிகளில் இடாதிருத்தல்.

## மீள் உருவாக்கம் (Re-place)

உற்பத்திக் கருமத்திற்காகப் பயன்படுத்தப்படுகின்ற இயற்கை வளங்களில் மீள் உருவாக்கம் செய்யக்கூடிய வளங்களை மீண்டும் சூழலில் உருவாக்குதல் என்பது இதன் கருத்தாகும்.

உதாரணம் :

- காட்டிலுள்ள மரப்பலகைகளை மூலப் பொருளாகப் பயன்படுத்துகின்ற நிறுவனமொன்று காடுகளில் மரங்களை உற்பத்தி செய்யும் வணிகமொன்றை ஆரம்பித்தல்.
- மீன்பிடித் தொழிலில் ஈடுபடும் வணிகமொன்று மீன்வளர்ப்பை மேற்கொள்ளல்.
- பனை வளங்களை பயன்படுத்தும் நிறுவனங்கள் பனை நடுகையை தொடர்ச்சியாக மேற்கொள்ளல் வேண்டும்.

## வணிக நடவடிக்கையின் பாதகமான தாக்கங்கள்

- அதிக இலாப எதிர்பார்ப்புடன் தரத்தில் குறைந்த பொருள்களை ஏற்றுமதி செய்தல்.
- கூடிய போட்டித் தன்மையான நிலைமைகளில் நுகர்வாளர்களை ஏமாற்றுதல்.
- ஊழியர் நலனோன்பு தொடர்பில் கூடிய அக்கறை செலுத்தாமை.
- இயற்கை வளங்களை வீணாக்கக்கூடியவாறு உற்பத்தி நடவடிக்கையை மேற்கொள்ளல்.
- சூழல் மாசடையக்கூடியவாறு கழிவுப் பொருட்களை அகற்றுதல்.
- எமது நாட்டின் சமூக, கலாச்சாரங்களுக்கு ஒவ்வாத வகையில் வியாபார விளம்பரங்களை மேற்கொள்ளல்.
- சமூக கலாசாரத்திற்குப் பொருந்தாத வகையில் ஆடை வடிவமைப்புக்களை உருவாக்குதல்.

“சகல மரங்களையும் வெட்டிய பின்னர்,
சகல நதிகளும் வரண்டு போன பின்னர்,
இறுதியாகக் காணப்பட்ட மீனையும் பிடித்து சாப்பிட்ட பின்னர்,
பணத்தினை உணவாக எடுக்க முடியாது”

இக்கூற்றில் இருந்து தற்காலத்தில் உள்ள சகல வளங்களையும் முறையற்ற வகையில் பயன்படுத்துவதினால் எதிர்காலப் பரம்பரையினருக்கு அற்றுப்போகும் எனவும் தற்காலத்திலுள்ள பரம்பரையினர் தமது தேவைகள், விருப்பங்களை நிறைவு செய்யும்போது எதிர்காலப் பரம்பரையினரின் தேவைகள் விருப்பங்கள் தொடர்பிலும் கவனம் செலுத்த வேண்டும் என்பதை அனைத்து தரப்பினரும் உணர்ந்து செயற்பட்டால் நிலைபேறான அபிவிருத்தியினை அடைய முடியம் என்பதில் மிகையாகாது.

**“பனை மான்மியம்” என்றும் பயன்தரும்!**
**பரம்பரையினர் தேவைகள் அதில் நிறைவுறும்!**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# “பனை மான்மியம்” –2019 நிகழ்வில் கௌரவிக்கப்படும் சங்கங்களின் சிறந்த அங்கத்தவர்கள்



திரு ந.தேவராசா
கிளிநொச்சி ப.தெ.வ.
அ.கூ.சங்கம்



திரு சி.பொன்னுத்துரை
பனை ப.தெ.வ.
அ.கூ.சங்கம்



திரு க.உதயச்செல்வம்
பூநகரி ப.தெ.வ.
அ.கூ.சங்கம்



திரு க.கருணைதேவன்
மன்னார் மேற்கு ப.தெ.வ.
அ.கூ.சங்கம்



திரு V.செல்வரெத்தினம்
நானாட்டான் ப.தெ.வ.
அ.கூ.சங்கம்



திரு அ.ஜெகநாதன்
மன்னார் கிழக்கு ப.தெ.வ.
அ.கூ.சங்கம்



திரு கா.பரமேஸ்வரன்
அடம்பன் ப.தெ.வ.
அ.கூ.சங்கம்



திரு யே.பேற்றூஸ் இறைநோல்ட்
புளியங்குளம் ப.தெ.வ.
அ.கூ.சங்கம்



திரு இ.ஜெயகாந்தன்
நெடுங்கேணி ப.தெ.வ.
அ.கூ.சங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

T.கமல்
காரைநகர் ப.தெ.வ.
அ.கூ.சங்கம்

# பாலகன் முருகன் கடைக்கண் பார்த்திட வேண்டும்



கரம் தனில் வாள் கொண்டு
புவி தனில் பகை முடித்து
தரணி தனில் தலை நிமிர்ந்து
தமிழர் என நாம் சொல்ல
தமிழ் காத்து தன்னுயிர் நீத்த
தமிழ் மன்னன் சங்கிலியன்
ஆண்ட மண்ணாம் நல்லூர்
வீரத்திருமகன் புகழை
பல்நாட்டவரும் பருகிட
அழகுரு கொண்டு
கலை பல கண்டு
மிளிர்ந்து நிற்கும் இடமாம்
சங்கிலியன் பூங்கா!

இளந்தென்றல் காற்றும்
பசுமை கொண்ட இலைகளும்
பூத்துக் குலுங்கும் காய் கனிகளும்
மனதை மயங்க வைக்கும்
இளவேனில் காலமதில்
ஆண்டு தோறும் ஒரு விழா
அது பனை தென்னை வள
அமைப்புக்களின்
கண்காட்சி தினவிழா!

பனையோலை உருமாறி
அலங்காரமாயிருக்கும்
பனை வெல்லம் கற்கண்டும்
மருந்தாயிருக்கும்
பாணிப்பனாட்டு நா ருசிக்க
கைக்கிடைக்கும்
பதனீர் குளிராய்
குளிர்பெட்டியில் இருக்கும்
பனை ஈர்க்கும் தூரிகையால்
உயிர் பெற்று
அலங்காரமாய்த் தொங்கும்
நவநாகரிக பெண்ணின் கைகளிலே
பனம் தும்புப் பேஃசும் போயிருந்து
பண்பாட்டு பெருமை பேசும்

அடி முதல் நுனி வரை
வகையாய் தன்னை வகுத்து
வறியவன் கரத்தையும் வலிமையாக்கும்
கற்பக தாயவள் பெருமை
கொட்டிக் கிடக்கும்
சங்கிலியன் பூங்காவில்
பனை வார கண்காட்சி என்று
நாவினால் உரைப்பார்
கண்ணுக்கு விருந்தான காட்சி கண்டு
பார்த்த பின் உணர்வார்
உழைப்பவன் வியர்வை உருவிலே காண்பார்
ஒற்றுமையின் பலத்தை மனதார பார்ப்பார்

ஜாதி மத பேதம் படுகுழியில் போகும்
ஒரு தாய் மக்களாய் அனைவரும் சேரும்
பனை வாரக் கண்காட்சி
நாளெல்லாம் வேண்டும்
அனைவரும் நாளும் நலம் பெற
பார்வதி மைந்தன் பாலகன் முருகன்
கடைக்கண் பார்த்திட வேண்டும்
எமக்கந்த வரத்தைத் தந்திட வேண்டும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடிமரத்தில் .........

திருமதி. யோ.ரவிச்சந்திரன்
கோப்பாய் ப.தெ.வ.அ.கூ.சங்கம்

சிறுகதை



அதிகாலைப் பொழுதிலே ஆஜானுபாகுவாக மதியழகன் காலைக் கடன் முடித்து, இறைவனை வழிபட்டு, நெற்றியில் வீபூதி அணிந்து தன்னுடைய தொழிலை செய்வதற்கு தீட்டுத்தடியை நோக்கிப் புறப்பட்டான். தன்னுடைய பாளை சீவும் கத்தியை மேலும் கூர்மைய டையச் செய்ய கத்தியை தீட்டுவதற்கு கருங்கல் துண்டு இரண்டை ஒன்றுடன் ஒன்று தட்டி அதன் துகள்களை தீட்டுத் தடியிலே படரவிட்டான். பின்னர் தன்னு டைய கத்தியை தீட்டுத்தடியிலே தீட்ட ஆர ம்பித்தான். அப்பொழுது வீட்டின் பின்புறத் திலே கட்டியிருந்த மாடு கத்தும் சத்தம் அவனது காதுகளுக்கு கேட்டது. அவன் தனது மனைவி கற்பகத்தை அழைத்து "மாடு கத்துகிறது வேளைக்கு பாலைக் கற" என்று கூறிவிட்டு தனது சீவல் தொழிலுக்கு வேண்டிய பாத்திரங்களை எல்லாம் சுத்தமாக கழுவி எடுத்துக்கொண்டு தனது இயனக்கூட்டைக் கட்டினான். அப்பொழுது கற்பகம் அவனுக்காக ஒரு உருண்டை உழுத்தம் மாவை தேனீருடன் எடுத்துக்கொண்டுவந்து மதியழகனிடம் கொடுத்துவிட்டு, "இண்டைக்கு கோயிலுக்கு போகவேணுமப்பா. வேளைக்கு தொழிலை முடிச்சிட்டு வாங்கோ" என்று சொன்னாள். அவன் அந்த உருண்டையை சாப்பிட்டுக்கொண்டு தேநீரையும் பருகினான். பின்னர் அவன் தன்னுடைய தொழிலுக்காக தனது சைக்கிளை எடுத்துக்கொண்டு புறப்பட்டான். கற்பகமும் பாலைக்கறந்து விட்டு பிள்ளைகளுக்கும் காய்ச்சிக் கொடுத்துவிட்டு மிகுதிப்பாலை பாற்பண்ணைக்கு கொடுக்கச் சென்றாள்.

அன்பழகனின் தந்தை ஒரு சீவல் தொழிலாளி. அவர் அவ்வளவாகப் படிக்கவில்லை. ஆனாலும் அவருக்கு எழுத வாசிக்கத் தெரிந்திருந்தது. அவர் புராணக் கதைகளையும் நன்கு வாசித்திருந்தார். அந்த அறிவைக்கொண்டு நேர்மையாகவும், ஒழுக்கமாகவும் வாழ்ந்து வந்தார். இவரது மனைவியின் பெயர் கண்ணகி. அவர்களின் ஒரே மகன்தான் மதியழகன். ஒருபிள்ளை என்ற காரணத்தினால் செல்லமாக வளர்த்தனர். கல்வியில் அவனை வளர்த் தெடுக்க எவ்வளவோ முயன்றும் மதியழகனை கற்பிக்க முடியவில்லை. சிறுவயதிலேயே துடிப்பாகவும், அதிகம் குழப்படி செய்பவனாகவும், எவருக்கும் பயப்படாத முரட்டுத்தனம் உள்ள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வனாகவும் இருந்த காரணத்தால் அவன் கல்வியில் அதிகம் அக்கறை செலுத்தவில்லை. தனது தந்தையின் சீவல் தொழிலை தானும் கற்று அதன் மூலம் வருமானத்தை ஈட்டிக்கொண்டான். ஒரே மகன் என்ற காரணத்தால் அவனது விருப்பப்படியே தாய் தந்தையரும் விட்டுவிட்டனர்.

அவன் தனது வருமானங்களை எல்லாம் சேமித்து வங்கியில் வைப்பிலிட்டு வந்தான். நடுத்தரவர்க்க குடும்பத்தைச் சேர்ந்த இவர்கள் சீவல் தொழில் புரிபவர்களுக்கு முன்னுதாரண மாக இருந்து வந்தனர்.

மதியழகனுக்கு ஐந்து பிள்ளைகள் இரண்டு பெண்கள், மூன்று ஆண்கள். மூத்தமகள் றேஸ்மா யாழ் பல்கலைக்கழகத்தில் மருத்துவ பீட மாணவி, இரண்டாவது மகன் நிசாந்தன் மொறட்டுவ பல்கலைக்கழகத்தின் பொறியியற்துறை மாணவன். மூன்றாவது மகள் சஜானிகா க.பொ.த. உயர்தரப் பரீட்சை எழுதிவிட்டு கணனிப் படிப்பை தொடர்ந்து கொண்டிருக்கின்றாள். நான்காவது மகன் மதுரங்கன் க.பொ.த.சாதாரண தரத்தில் தேர்ச்சிபெற்று தகவல் தொழில் நுட்ப பாடத்தை தெரிவுசெய்து படித்து வருகின்றான். ஐந்தாவது மகன் நிலக்ஸன் 8ம் தரத்தில் கல்வி கற்று வருகின்றான்.

கற்பகம் வீட்டு வேலைகளைச் செய்வது, ஆடுமாடுகளை பராமரிப்பது. பிள்ளைகளின் சீருடைகளை துவைத்து அயன் செய்துகொடுப்பது போன்ற வேலைகளுடன் வீட்டில் தையல் வேலையும் செய்து வந்தாள். அவர்களின் ஊரில் சாறிச்சட்டை தைப்பதில் கற்பகத்திற்கு நிகர் கற்பகம் தான். அவ்வளவு நேர்த்தியாக தைப்பாள். அதனால் பெருமளவு வருமானத்தையும் ஈட்டிக்கொள்ள முடிந்தது. கற்பகத்திற்கு உதவியாக மதியழகனின் தாயும் வீட்டு வேலைகளுக்கு ஒத்தாசை செய்து வந்தார்.

மதியழகனும் கற்பகமும் காதலித்து திருமணம் முடித்தவர்கள் ஒருவர் மீது ஒருவர் மிகுந்த அக்கறையும், பாசமும் கொண்டவர்கள். எந்தச் சந்தர்ப்பத்திலும் ஒருவரையொருவர் விட்டுக்கொடுத்ததில்லை. இதனால் பிள்ளைகளையும் நல்ல குணமுள்ளவர்களாகவும், பண்பானவர்களாகவும் வளர்த்து வந்தனர்.

மதியழகன் குடும்பத்தார் பொதுச்சேவையில் அதிகம் ஈடுபாடில்லாதவர்களாக இருந் தாலும் அயலவர்கள், உறவினர்களுக்கு ஏதாவது உதவி தேவைப்பட்டால் தாமாக முன்வந்து செய்வார்கள்.

அயலவர்களுக்கு பணக்கஷ்டம் ஏற்பட்டால் வட்டி எதுவும் வாங்காது உதவி செய் வார்கள். ஆனாலும் சொன்ன தவணைக்கு அதனை கேட்டு வாங்கிவிடுவர்கள்.

குறிப்பறிந்து உதவி செய்வதில் மதியழகன் மிகவும் போற்றுதற்குரியவன். பண உதவி மட்டுமல்லாது சரீர உதவிகளையும் மற்றவர்களுக்கு செய்து கொடுப்பான். அதனால் கிராமத்தில் அவனுக்கென்று ஒரு மரியாதை எப்போதும் இருந்து வந்தது. தன்னோடு சீவல் தொழில் செய்யும் அயலவர்கள் யாருக்காவது சுகயீனம் ஏற்பட்டால் அவர்களது மரங்களையும் சீவிக்கொடுப்பான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீவல் தொழிலுக்குச் சென்ற மதியழகன் வழமைக்கு மாறாக நீண்ட நேரமாகியும் வீட்டிற்கு வரவில்லை. கற்பகம் பதறத் தொடங்கினாள். அயலவர்களிடம் தனது கணவர் இன்னும் வீட்டிற்கு வரவில்லை எங்காவது பார்த்தீர்களா? என வினவத் தொடங்கினாள். அடுத்த கணமே காட்டுத்தீ போன்று இவ்விடயம் ஊர்முழுக்க பரவியது. அவன் தொழில் செய்யும் இடங்கள் எல்லாம் தேடத் தொடங்கினர். பகல் 11 மணி கருப்பங்காட்டுப் பக்கமாக நின்ற பனை அடிவாரத்தில் மதியழகன் குற்றுயிரும் குலையுயிருமாக முனகிக் கொண்டிருந்தான். அவனை மருத்துவ மனைக்கு கொண்டு சென்றனர். தீவிர சிகிச்சைப் பிரிவில் அவன் அனுமதிக்கப்பட் டான்.

அன்றைய தினம் அவன் கடைசி மரத்தில் சீவல் செய்து கொண்டிருந்தபோது திடீரென வீசிய காற்றினால் மரவட்டிலிருந்து தூக்கியெறியப்பட்டு கீழே விழுந்திருந்தான். நீண்ட நேரம் இரத்தம் வெளியேறியிருந்தது. அவ்விடத்திற்கு யாரும் வருவது குறைவு என்பதால் எவரும் அவதானிக்கவில்லை. அதுவே அவனது வாழ்க்கையின் கடைசிப் பயணம் என்பது போல் சிகிச்சை பயனின்றி மருத்துவமனையிலேயே உயிரிழந்தான். அவன் பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் ஒரு உறுப்பினர். சங்கத்தால் நடைமுறைப்படுத்தப்படும் திட்டங்கள் அனைத்திலும் இணைந்து கொள்வான்.

இவனது இழப்பு அக்குடும்பத்திற்கு ஈடுசெய்ய முடியாத ஒன்று. இருப்பினும் சமாசத்தால் நடைமுறைப்படுத்தப்பட்டுவரும் சகாய நிதித்திட்டத்தில் மதியழகன் இணைந்து கொண்டிருந்த மையால் சகாயநிதிக் கொடை இரண்டு லட்சம், விபத்து மரணக்கொடை, இவற்றுடன் வடக்கு மாகாண சபை நிதி ஒதுக்கீட்டில் கூட்டுறவுத் திணைக்களத்தால் வழங்கப்படும் ஒரு லட்சம் என அக்குடும்பத்திற்கு ஆதரவான கொடுப்பனவுகளுடன் சமாசத்தால் வழங்கப்படும் ஓய்வுக்கால மாதாந்தக் கொடுப்பனவும் கற்பகத்திற்கு வழங்கப்பட்டது. சமாசத்தில் சிறந்த அங்கத்தவா் கௌரவிப்பு பெற்ற மதியழகன் இவ்வாண்டு 2019 "பனைமான்மிய" நிகழ்விலும் கௌரவம் பெறவிருந்தான். என்ன செய்ய? விதி வரைந்த பாதை வழியே.............

"கற்பகம் கண்ணீருடன் அந்தக் கௌரவிப்பை பெற்றாள்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2015, 2016, 2017ம் ஆண்டுகளில் நடைபெற்ற "பனை மான்மியம்" நிகழ்வுகளின் பதிவுகள்










"பனை மான்மியம்" –2019 நிகழ்வில் கௌரவிக்கப்படும் சிறந்த அங்கத்தவர்



திரு ச.தயாளநேசன்
வவுனியா ப.தெ.வ.
அ.கூ.சங்கம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "பனை மான்மியம்"

*திரு ச.பிரேம்ராஜ்,*
பருத்தித்துறை ப.தெ.வ.
அ.கூ.சங்கம்

பாரம்பரிய சொத்து எங்கள் பனைவளம் – நம்
பரம்பரைக்கு கிடைத்த ஓர்தனி வளம்
செந்தமிழ் சொல்லொரு நம் கற்பகதரு – அதை
சரித்திரம் சொல்லிவரும் எண்ணக்கரு
பெருந்தோட்டமாம் தேயிலை றபர் தெங்கு
பெயரின்றி தவிக்கும் நம் பனையின் பங்கு
கண்பட்ட இடமெல்லாம் பயிராய் வளர்ந்திடும் –அது
தென்பட்ட இடமெல்லாம் விளைந்திடும்
பனையின் பயன்களோ பல நூறு
பண்பட்ட நெஞ்சங்கள் அதைக் கூறும்
பேர் பெற்றிட்ட ஓர் பானமாம் பதநீர்
ஊர் போற்மாம் அதை தினமும்
பெருஞ்செல்வம் நிகரற்ற பனைச்செல்வம்
அரும் பொருளான வாழ்வின் துணைச்செல்வம்
விடுதலைப்போரில் நிமிர்ந்து நின்று – வீரனாய்
வீழ்ந்திடின் துண்டுகள் பதுங்குகுழிக் காப்பரணாய்
விளங்கிய நம் பனையை என்றும் மறப்போமா – அதன்
வீர வரலாற்றுப் பங்கினை எழுதாமல் மறைப்போமா?
சின்னப்பனை கட்டைப்பனை உயரப்பனை
ஆண்பனை பெண்பனை இரண்டும் கறுத்தப்பனை
ஆவிற்கு தீனியாகும் பனை ஓலை
அழகிய பன்ன வேலைக்கும் பனை ஓலை
அரிசி புடைக்க சுளகிற்கு பனை ஈர்க்கு
அடுப்பு எரிக்க நல்ல பனம் விறகு – நம்
எல்லை வேலி அடைக்க பனம்மட்டை
இனிப்பாய் சுவைத்திட பதநீர்
புளிப்பாய் பருகிட பனஞ்சாறு
பல்லுக்கு இதமான பனங்கிழங்கு
பச்சை ஒடியலும் முறுகிய புழுக்கொடியலும்
பாணியும் கடிக்க நல்ல கல்லாக்காரமும்
பழஞ்சாற்றில் பணியாரம் பனாட்டு
பிணி கொள் சர்க்கரை வியாதிக்கு வெல்லம்
வீட்டுக்கூரைக்கு சீவிய பனைமரம்
விதமான பாவனைக்கு என்றும் பனைமரம்
விசமற்று ஏர்ப்பாக்கா ஈர்க்கு சிராய் – பக்க
விளைவுகள் ஏதுமற்ற பனைப்பண்டம் – என்றும்
பட்டியல் போட முடியா நம் பனையதில்
பயன் பெறுவீர்! என்றும் பலன் பெறுவீர்!



... யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமாசப் பயணப் பாதையில்....

*திரு பொ.செல்வராசா,*
பொதுமுகாமையாளர்,
யாழ். மாவட்ட ப.தெ.வ.அ.கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் (வ.து)

## நலத்திட்டச் செயற்பாடுகள்

அங்கத்துவ சங்கங்களின் ஒன்றுபட்ட அபிப்பிராயங்களை வெளிப்படுத்தும் முகமாக ஆரம்பிக்கப்பட்டதே பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்.

இது 1979ம் ஆண்டு வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் என ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும் 30 வருட யுத்த சூழ்நிலை காரணமாக சங்கங்களின் ஒருங்கிணைந்த செயற்பாடுகளை அந்தந்த மாவட்ட சமாசங்கள் கவனித்து வந்தமையினால் எமது சமாசமும் யாழ். மாவட்ட பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் என பெயர் மாற்றம் செய்யப்பட்டு செயற்பட்டு வருகின்றது.

## அங்கத்துவ சங்கங்களுக்கு வழங்கும் சேவைகள்

- அங்கத்துவ சங்கங்களின் உற்பத்தி பொருட்களுக்கான சந்தை வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுத்தல்.
- நவீன தொழில் நுட்ப வசதிகளையும், ஆலோசனைகளையும் பெற்றுக்கொடுத்தல்.
- வேண்டிய தொழில் உபகரணங்களைப் பெற்றுக்கொடுத்தல்.
- ஒருங்கிணைந்த கல்வி வேலைத்திட்டத்தின்மூலம் பயிற்சி வகுப்புக்களையும், கருத்தரங்குகளையும் நடாத்துதல்.
- சங்கங்களுக்குத் தேவையான படிவங்களையும் மற்றும் ஆவணங்களையும் அச்சிட்டு வழங்குவதும், காகிதாகி, எழுதுகருவிகளை பெற்றுக்கொடுத்தலும்.
- அங்கீகரிக்கப்பட்ட முகவர் சேவைகளை நடாத்துதல்.
- உறுப்புரிமை சங்கங்களின் அங்கத்தவர்கள் பணியாளர்களுக்கான நலத்திட்டங்களைச் செயற்படுத்தல்.

இவ்வகைத் திட்டங்களில் மூன்று பாரிய நலத்திட்டங்கள் மூலம் தற்போது சிறப்பான சேவை வழங்கப்பட்டு வருகின்றது.

1. அங்கத்தவர் விபத்து ஓய்வூதிய நலத்திட்டம்.
2. அங்கத்தவர் பணியாளர்களுக்கான சமூக பாதுகாப்பு நலத்திட்டம்.
3. அங்கத்தவர் பணியாளர் சகாய நிதிய நலத்திட்டம்.

பணிப்பாளர் சபையின் சிந்தனையில் உருவாகிய இத்திட்டங்களுக்கான தனித்தனியான நடைமுறைகள் வகுக்கப்பட்டு பொதுச்சபையின் அங்கீகாரத்துடனும் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரின் அனுமதியுடனும் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. இத்திட்டத்தில் காலத்திற்கு ஏற்ப புதிதாக சேர்க்கப்பட வேண்டிய அல்லது மாற்றம் செய்ய வேண்டிய அல்லது நீக்கப்படவேண்டிய விடயங்கள் தொடர்பில் வருடாந்த மீளாய்வின்போது கவனத்திற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்ளப்பட்டு உரிய நடைமுறைவிதிகளில் திருத்தம் கொண்டுவரப்படுகின்றது. இதற்கு கூட்டுறவுத் திணைக்களத்தின் தகுந்த ஆலோசனைகளும் வழிகாட்டல்களும் பெறப்படுகிறது.

## 1. அங்கத்தவர் விபத்து ஓய்வூதிய நலத்திட்டம்

இது 1981ம் ஆண்டு விபத்து நிதித்திட்டமாக ஆரம்பிக்கப்பட்டது. பின்னர் 2006 யூலை மாதத்திலிருந்து அங்கத்தவர் விபத்து ஓய்வூதிய நலத்திட்டமாக மாற்றப்பட்டது. ஆரம்பத்தில் குறுகியகால, மத்தியகால, நீண்டகால நிரந்தர பாதிப்பு மற்றும் விபத்து மரணங்களுக்கே கொடுப்பனவுகள் வழங்கப்பட்டு வந்தன. பின்னர் குறுகியகால பாதிப்பை நீக்கி ஏனைய பாதிப்புக்களுக்கான கொடுப்பனவுகளுடன் 60வயது பூர்த்தியாகும் உறுப்பினர்களுக்கு ஓய்வூதியம் வழங்கும் திட்டம் நடைமுறைக்கு கொண்டு வரப்பட்டது. இத்திட்டத்திற்கான நிதி மூலங்கள் அங்கத்தவர்களினதும் நிறுவனங்களினதும் பங்களிப்புக்கள் மூலம் உருவாக்கப் படுகிறது. அங்கத்தவர்கள் தொழிற்படும் காலத்தில் வழங்கப்படும் உற்பத்திப் பெறுமதியில் 2% மும், நிறுவனத்தின் பங்களிப்பு 1 % மும் பெறப்படுகிறது. இத்திரண்ட நிதி பயனுறுதிமிக்க வகையில் அரச வங்கிகளிலும் தொழிற்துறைகளிலும் முதலீடு செய்யப்பட்டு கிடைக்கும் வட்டி வருமானத்திலிருந்து விபத்து மற்றும் ஓய்வூதியக் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டு வருகிறது.

தற்போது அங்கத்தவர் பங்களிப்புக்கு ஏற்ப மாதாந்தம் 9 வீதம் ஓய்வூதியமாக வழங்கப்படுகிறது. இத்திட்டத்திற்கென தற்போது 216.8 மில்லியன் ரூபா திரட்டப்பட்டு 1132 உறுப்பினர்களுக்கு மாதாந்த ஓய்வூதியம் வழங்கப்பட்டு வருகிறது.

## 2. அங்கத்தவர் பணியாளர்களுக்கான சமூக பாதுகாப்பு நலத்திட்டம்

ஏற்கனவே 2002 இல் ஆரம்பிக்கப்பட்டு நடைமுறையில் இருந்த இத்திட்டம் 1.1.2011 இலிருந்து மேலும் பல பிரிவுகளை உள்ளடக்கி விரிவுபடுத்தப்பட்டு தற்போது நடைமுறைப் படுத்தப்படுகிறது.

இதற்கான நிதிமூலம் அங்கத்துவ நிறுவனங்களின் அலகுரீதியான விற்பனையில் 50 சதமும், 1 ரூபாவும் பெறப்பட்டு திரட்டப்படுகிறது. இத்திரண்ட நிதி பயனுறுதிமிக்க வகையில் அரச வங்கிகளில் முதலீடு செய்யப்பட்டு கிடைக்கும் வட்டி வருமானத்திலிருந்து நடைமுறைப் படுத்தப்படுகிறது. தற்போது இந்நிதியத்திற்கு 38 மில்லியன் ரூபா திரட்டப்பட்டுள்ளது.

**இதன்மூலம் செயற்படுத்தப்படும் நலத்திட்டங்கள்**

- தொழிற்படும் அங்கத்தவர்கள், பணியாளர், முன்பள்ளி ஆசிரியர்களிடம் கல்வி கற்கும் பிள்ளைகளுக்கான வருடாந்த கல்விக்கான ஊக்குவிப்புக்கள்.
- கற்றல் உபகரணங்கள் வழங்கல்.
- 5ம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த பிள்ளைகளுக்கு பரிசில் வழங்கல்.
- க.பொ.த (சா/த) பரீட்சையில் 9A மற்றும் 6A உட்பட எல்லாப் பாடங்களிலும் சித்தியடைந்த மாணவர்களுக்கான பணப்பரிசில் வழங்கல்.
- பல்கலைக்கழக அனுமதி பெற்ற மாணவர்களுக்கான பணப்பரிசில் வழங்கல்.
- உயர் தொழில்நுட்ப கல்லூரி / தேசிய கல்வியற் கல்லூரி / விவசாய பயிற்சிக் கல்லூரிக்கு தெரிவாகி பயிற்சியை தொடரும் மாணவர்களுக்கு பணப்பரிசில் வழங்கல்.
- தேசிய, சர்வதேச மட்டப் போட்டிகளில் வெற்றியீட்டும் மாணவர்களுக்கு பணப்பரிசில் வழங்கல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- அங்கத்தவர், பணியாளர் அவர்கள் சார்ந்த குடும்ப உறுப்பினர்களுக்கு வைத்திய நிதி வழங்குதல்.
- இருதயச் சத்திர சிகிச்சை
- சிறுநீரக சத்திர சிகிச்சை
- கண் சத்திர சிகிச்சை
- சங்க மட்டங்களில் இரு வருடங்களுக்கு ஒரு தடவை கண் பரிசோதனையும், கண்ணாடி வழங்கலும்
- குடல் சம்மந்தமான சத்திர சிகிச்சை.
- கை, கால் இயங்க முடியாதநிலை (பாரிசவாதம்).
- நடமாடும் மருத்துவ பரிசோதனைகளை சங்க மட்டங்களில் நடாத்துதல்
- வெல்ல உற்பத்தி விற்பனைக்கான ஊக்குவிப்பு நிதி வழங்குதல்
- வருடாந்தம் அங்கத்தவர் பணியளர்களை கல்விச் சுற்றுலாவுக்கு அழைத்துச் செல்லல்.
- நடமாடும் சித்த மருத்துவ சேவைகளை நடாத்தும் சங்கங்களுக்கு உதவு நிதி வழங்குதல்
- பனைவளம் தொடர்பான துறைசார்ந்தவர்களுக்கு நவீன தொழிற் பயிற்சிகளை தேசிய ரீதியாகவும், சர்வதேச ரீதியாகவும் பெற்றுக்கொள்ள உதவுதல்.
- அங்கத்தவர்கள், பணியாளர்கள், மகளீர் குழு உறுப்பினர்கள், முன்பள்ளி மாண வர்கள், அங்கத்தவர்கள் மற்றும் பணியாளர்களின் கல்வி கற்கும் மாணவர்களுக்கு பல்வேறு மட்டங்களிலும் போட்டிகளை நடாத்துதல்.
- அங்கத்துவ நிறுவனங்களில் சிறப்பாக தொழிற்படும் அங்கத்தவர், பணியாளர்கள், மற்றும் சேவையாற்றி ஓய்வுபெற்றுச் செல்லும் தலைவர்கள், பொதுமுகாமையாளர் களையும் கௌரவித்தல்.
- அங்கத்துவ நிறுவனங்களின் நலன்சார்ந்த பொது விடயங்களுக்காக செலவுகளை வழங்குதல்.
- வருடாவருடம் கூட்டுறவுதின விழாவை சிறப்பாகசெய்தல்.

### 3. அங்கத்தவர் பணியாளர் சகாய நலத்திட்டம்

இத்திட்டம் 2015ம் ஆண்டு ஏப்ரல் மாதம் ஆரம்பிக்கப்பட்டது. அங்கத்தவர், பணியாளர் மட்டுமல்லாமல் அவர்கள்தம் குடும்ப உறுப்பினர்களும் ஏனைய வகை கூட்டுறவு நிறுவனங் களின் உறுப்பினர்களும் பணியாளர்களும் இணைந்து கொள்ளலாம்.

இத்திட்டத்திற்கான நிதி உறுப்பினர் ஒருவர் வருடம் ஒன்றுக்கு ரூபா 1000 வீதம் டிசம்பர் 31க்கு முன்னர் செலுத்தப்பட வேண்டும். இதுவரை 10 மில்லியன் ரூபா திரட்டப்பட்டுள்ளது. விபத்து பாதிப்பிற்குட்பட்டு வைத்திசாலையில் தங்கியிருந்து சிகிச்சை பெறும்போது நாளொன் றுக்கு ரூபா 1000 வீதம் (உச்ச தொகை 7000ரூபா) வழங்கப்படுகிறது. விபத்துக்குட்பட்டு மரணமடையும் உறுப்பினரின் சட்டப்படியான பின்னுரித்தாளிக்கு ரூபா 200,000.00 மரண சகாயநிதி வழங்கப்படுகிறது. இதுதவிர மாரடைப்பால் ஏற்படும் மரணங்களுக்கு 50,000ரூபா மரணநிதியாக அவரின் சட்டப்படியான பின்னுரித்தாளிக்கு வழங்கப்படுகிறது. ஐந்தாண்டுகள் தொடர்ச்சியாக பங்களிப்பு செய்த உறுப்பினர்கள் பாதிப்பு நிதி எதனையும் பெறாதிருந்தால் பணிப்பாளர் சபையினதும் பொதுச்சபையினதும் தீர்மானத்திற்கு அமைய செலுத்திய நிதியின் ஒரு பகுதி மீள வழங்கப்படும்.

இவ்வகைத் திட்டங்களின் மூலம் அங்கத்தவர், பணியாளர்கள் சமூகம் சார்ந்த குடும்ப உறுப்பினர்கள் என பல ஆயிரக்கணக்கானவர்கள் நன்மையடைந்து வருகிறார்கள். எதிர் காலத்தில் இத்திட்டம் நீடித்து நிலைத்து பயனளிக்கக்கூடிய வகையில் செயற்பட பணிப்பாளர் சபையினரின் தூரநோக்குத் தந்திரோபாய தீர்மானங்களே நிர்ணயிக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "பனை மான்மியம்" -2019 ஓவியப் போட்டியில் மாகாண மட்டத்தில் முதல் மூன்று நிலைகளைப் பெற்ற ஓவியங்கள்

## பிரிவு - 1

**1**
செல்வன் ரி.கோவெழிலன்
தரம் - 3A
யா/ புனித ஜோன்பொஸ்கோ வித்தியாலயம்



**2**
செல்வி க.வர்ணவி
தரம் - 3
மு/ முள்ளியவளை தமிழ் வித்தியாலயம்




**3**
செல்வி அ.திஸ்யா
தரம் - 1 A
யா/ சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை



## பிரிவு - 2

**1**
செல்வி றொ.ஆன்லிஷா
தரம் - 4E
யா/ புனித ஜோன்பொஸ்கோ வித்தியாலயம்



**2**
செல்வி க.கஜீவனா
தரம் - 4
யா/ அம்பன் அ.த.க.பாடசாலை



**3**
செல்வன் சி.எழில்டிதன்
தரம் - 5
யா/ துன்னாலை வடக்கு மெ.மி.த.க.பாடசாலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமிர்தம் சுரக்கும் அக்ஷய பாத்திரம்

அச்சுநகர் அச்சுதன்



வைகறை துயிலெழுந்து வாஞ்சையுடன்

வையக கற்பகம் உனை அணைக்க

காதோலினை கனதியாய் மாட்டி

மா தோலினை மார்பினில் ஏந்தி

கட்டழகன் காந்தனவன் –கனதூரம்

காத்திரமாய் நடந்து ஒற்றையாய் நிற்கும் உன்னை

காந்தக் கண்களால் ஒருதடவை வருடி

அன்புடன் நோக்கி அடியெடுத்து வைத்து

அடுத்த கணமே உன் வட்டினில் புகுந்து

பருவமாய் இரண்டு பூந்துனர்கள்

பதப்படுத்தக் காத்திருந்து கண்சிமிட்ட...

பதமாய் வருடி பக்குவமாய் கசக்கி

பலதடவை இடுக்கினைத்தட்டி

வாட்ட முற்றதும் அமிர்தம் சுரக்க

வட்டக் குதங்கள் முடியேகட்டி

பதநீரதனை பக்குவமாய் எடுத்து

பருக நல்ல பானமாய் கொடுத்தான்

தால விருட்சமே தரணியில் உன்புகழ்

தமிழுடன் கலந்ததே தமிழர் வாழ்வினில் இணைந்ததே

இலக்கியம் பலவற்றில் இங்கிதமாகவே

இணைந்திட்ட செல்வமே அழியாப் புகழ்கொண்ட

பனை மரத்தாயே! இப்புவி மீதில்

பல்வேறு பண்டங்கள் நோய்தீர்க்கும் மருந்தாக

கைப்பணிப் பொருட்களோ ஏராளம் ஏராளம்

கைம்பெண்கள் வாழ்விற்கு வழிகாட்டும் எந்நாளும்

அமிர்தத்தை சுரந்திடும் அக்ஷய பாத்திரம்

அவனியில் எப்போதும் சரித்திரம் படைத்திடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிள்ளைகளுக்கு ஏற்படும் தாக்கங்களும் அவற்றைக் கையாளும் முறைகளும்

ப.கிருபாயினி, - கல்வி அலுவலர்,
வட மாகாண ப.தெ.வ.அ.கூ சங்கங்களின் சமாசம்.

எமது நாட்டில் ஏற்பட்ட அசம்பாவிதங்களும் நெருக்கீடுகளும் மக்கள் மத்தியில் இன்றும் பாரதூரமான தாக்கங்களை ஏற்படுத்தியிருப்பது கண்கூடு. இன்றைய சூழ்நிலையில் தோன் றியுள்ள பாதுகாப்பற்ற நிலை, நிச்சயமற்ற உணர்வு, உயிர், உடமை இழப்பு, தீவிரமான காய ங்கள், விபத்துக்கள், கொலைகள், தற்கொலைகள் போன்ற அவல அனுபவங்கள் உளவியக்க ரீதியாகப் பெரும் விளைவுகளை ஏற்படுத்தியிருக்கின்றன. இதனால் பிள்ளைகள் மத்தியில் உடல், உள நோய்கள், மற்றும் கற்றலில் இடர்பாடுகள், பாடசாலை செல்ல மறுத்தல் கருத் தூன்றிக் கற்க முடியாமை, ஞாபகசக்தி குன்றல். நடத்தைக் கோளாறுகள், உணர்ச்சிக் குழப் பங்கள், உறவுகளில் குறைபாடுகள் போன்ற பலவித பிரதிபலிப்புக்களைக் காணலாம்.

## பாதிப்பினால் ஏற்படும் விளைவுகள்

பாதிப்புக்களால் இயற்கையாக உண்டாகும் உடல் உள விளைவுகளும், உணர்ச்சி களும் ஆரோக்கியத்தின் துலக்கங்கள். ஏனெனில் இவை எம்மை அபாயமான சூழலிலிருந்து விலக்கிக் கொள்ளவும், தற்காப்பு முயற்சிகள் எடுக்கவும், மற்றும் மனச் சமநிலையைப் பேண வும், நெருக்கீட்டைக் கையாளவும் ஊக்குவித்து நம்மை இயைந்து வாழ்க்கையைத் தொடர வழிவகுக்கும்.

☞ சிலவேளைகளில் இப்படியான பாதிப்புக்கள் தீவிரமாக நீடித்தால் அவற்றின் தாக்கம் நம்மால் தாங்கும் சக்திக்கு அப்பாற்பட்டு பாதகமான விளைவுகளைத் தோற்றுவிக்கும்.

## பிள்ளைகளைத் தாக்கக்கூடிய பாதிப்புக்கள்:

முதிர்ச்சியையும் மனக்குழப்பத்தையும் உண்டாக்கும் அசாதாரண நிகழ்வுகளையே இங்கு பாதிப்பு அல்லது தாக்கம் எனக் குறிப்பிடுகின்றோம். பாதிப்பு உள இயக்க ரீதியாக ஒரு மனிதனின் மன எண்ணக்கருக்கள், உலக மாதிரிகள், எதிர்பார்ப்புக்கள், நெருங்கிய உறவுகள் தொடர்புகள் போன்றவற்றைச் சிதைத்து நிர்க்கதியான மூழ்கடிக்கப்பட்ட கையறு நிலையை உருவாக்கும், இவை போன்ற அதிதீவிரமான அசம்பாவிதங்கள், மனதில் ஊடுருவி ஆழமாகப் பதிந்து மன வடுக்களை விட்டுச்செல்லும். பெரியோர்களிலும் பார்க்கச் சிறுவர்களில் இத்தாக் கங்கள் குறைவாகக் காணப்படுகின்றன. சிறுவர்களின் ஆர்வம், துருவி ஆராயும் ஆவல், கபடமற்ற அப்பாவித்தன்மை, நிகழ்வுகளின் அனர்த்தங்களையும், விளைவுகளையும் முற்றா கப் புரிந்துகொள்ளாமை போன்ற குணாதிசயங்களால், நெருக்கீடுகளைச் சுலபமாகவும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளையாட்டுத் தன்மையுடனும் எதிர்கொள்ளலாம். ஆயினும் பெற்றோர்களிடமிருந்து (முக்கியமாகத் தாய்) குழந்தைகள் பிரிந்திருப்பின் பாரதூரமான தாக்கங்கள் ஏற்படும்.

☞ பெற்றோர் பாதிக்கப்பட்டிருப்பின் அது பிள்ளைகளில் பிரதிபலிக்கலாம்.

☞ பழகிய சூழலிலிருந்து பிரிந்திருத்தல், சொத்துக்களை இழத்தல், நண்பர்கள் உறவினர்களைப் பிரிந்து புதிய சூழலில் வாழுதல். இவை சிறார்கள் மத்தியில் உணர்ச்சியிலும், நடத்தைகளிலும் மாற்றங்களையும் மனோ சமூக விருத்தியில் பின்னடைவுகளையும் ஏற்படுத்தும்.

## பிள்ளைகள் மத்தியில் பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய பொதுக்காரணிகள்

☞ போசாக்கின்மையும் வறுமையும்.

☞ பெற்றோர் வேலைவாய்ப்பின்மை, பொருளாதாரக் கஷ்டங்கள், வீடுகள், சொத்துக்கள் பாதிப்பு

☞ நோய்வாய்ப்படும் நிலை : நோய் எதிர்க்கும் சக்தி குறைவு, தொற்று நோய்கள் அதிகரிப்பு, சுற்றாடல் சுகாதாரம் பாதிப்பு, சுகாதார சேவைகள் சரிவர அளிக்கப்படாமை.

☞ இழப்புக்கள்: பெற்றோர் இறப்பு, காணாமற்போதல், குடும்பங்களிலிருந்து பிரிந்து இருத்தல்.

☞ வன்முறைகளைக் காணுதல்:

கொடூரமான முறையில் உறவினரின் மரணங்களை நேரடியாகக் காணுதல். குண்டு வெடிப்பிற்கு இலக்காதல், வாள் வெட்டுக்கள், வீதி விபத்துக்கள், குருதிப்பெருக்கம், வேதனை, நோவு, மரண அவஸ்தைகளைக் காணுதல், அங்கவீனப்பட்ட, உருக்குலைந்த சரீரங்களைக் காணுதல், தமது வீடு, ஆலயங்கள் அழிக்கப்படுவதை காணுதல்.

☞ வன்முறைகளைத் தாம் அனுபவத்தில்:

குடும்பத்தில் பெற்றோர்களுக்கிடையில் நடைபெறும் சண்டைகள், கருத்துமோதல்கள், தவறான பாலியல் தொடர்புகள், பிரிவினைகள் பிள்ளைகளுக்குள் வன்முறைகளை ஏற்படுத்துவதுடன் பிள்ளைகளும் வன்முறைகளில் ஈடுபடுவதற்கு அதாவது கொலை, களவு, போதை வஸ்து பாவனை, வாள்வெட்டு மற்றும் வன்செயல்களைச் செய்வதற்கும் வழிவகுக்கும்.

குறிப்பு : இலங்கையில் தற்பொழுதுள்ள கணக்கெடுப்பின்படி 115,000 சிறுவர்கள் போதைக்கு அடிமையாக உள்ளார்கள் என்று ஊடகங்கள் மூலம் அறிந்துகொள்ளலாம். "போதைப் பொருள் ஒழிப்பு அரச தலைவர் செயலணி, அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபை மற்றும் பொலிஸார் இணைந்து இந்த ஆய்வினை மேற்கொண்டனர். நாடு முழுவதும் ஒரு இலட்சத்துக்கும் அதிகமானோர், ஹெரோய்ன் போதைப் பொருளுக்கு அடிமையாகியுள்ளனர் என்றும் சுமார் 3 இலட்சம் பேர் கஞ்சா பயன்படுத்துகின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது"

## பிள்ளைகளில் பிரதிபலிக்கும் பாதிப்பு அறிகுறிகள்:

இழப்புக்கள் அல்லது பாதிப்புக்களால் ஏற்படும் வெளிக்காயங்களைவிட பாதிக்கப் பட்டவரின் உள்ளத்தில் ஏற்படும் ஊறுகள் கூடுதலாகக் காணப்படுகின்றன.

☞ உணர்ச்சிப் பிரச்சனை.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

- ☞ நடத்தைக் கோளாறுகள்.
- ☞ அறிவாற்றல் குறைபாடுகள்.
- ☞ மெய்ப்படுதல்.

## உணர்ச்சிப் பிரச்சனை

கவலை, பயம், அங்கலாய்ப்பு, குழப்பம், சோர்வு, நாணம், அஞ்சி ஒதுங்கும் சுபாவம், இலகுவாக அழுதல், கலகலப்பற்ற நிலை, எல்லை மீறிய கோபம், எதிர்க்கும் தன்மை, நெருங்கிப் பழகுபவர்களுடன் உறவுகளில் குறைபாடுகள், சந்தேகிக்கும் தன்மை. முதலியன.

## நடத்தைக் கோளாறுகள்

- ☞ அளவுமீறிய தொழிற்பாடு அல்லது எதிர்மாறாகச் செயலாற்றல், குன்றுதல், ஈடுபாடு குறைதல், ஆர்வமின்மை.
- ☞ குறும்பு, வலிந்து சண்டைக்குப் போதல், வன்முறையில் ஈடுபடுதல்.
- ☞ தொடர்ந்து தொல்லை கொடுத்தல், பொய் பேசுதல், களவு செய்தல்.
- ☞ பெரியோரை எதிர்த்தல், மதியாமை, கீழ்ப்படியாமை .
- ☞ மது, போதைவஸ்து அல்லது மருந்துத் துர்ப்பாவனை.
- ☞ பாடசாலைக்குச் செல்லாமை, ஒழுங்கின்மை,பாடசாலையில் இடர்தரு நடத்தை, சமூக விரோத செயற்பாடுகள்.

## அறிவாற்றல் குறைபாடுகள்

- ☞ அறிவாற்றல், கல்வி, பேச்சுத்திறன் பின்னடைவு (கொன்னை தட்டுதல், பேச முடியாமை) கற்றல் இடர்பாடுகள், கிரகிக்கும் தன்மை குறைதல்.
- ☞ சிந்திக்கும் தன்மையில் அமுக்கம், மறதி. கருத்தூன்ற முடியாமை, எதிர்கால எண்ணங்கள் அற்றுப் போதல் போன்ற நீண்டகால பாதிப்புக்கள் உண்டாகின்றன. இக்குறைபாடுகளைப் பாடசாலைப் பிள்ளைகளில் அவர்கள் வரையும் சித்திரங்களிலும், விளையாட்டுக்களிலும் ஆசிரியர்களால் அவதானிக்க முடியும்.

## மெய்ப்பாடு (உளம் சார்ந்த உடல்) அறிகுறிகள்

சிலவேளைகளில் நெருக்கீடுத் தாக்கங்களின் மனப்பாதிப்பானது உடல் ரீதியான முறையீடுகளாக வெளிப்பட முடியும். அதாவது உடலில் ஒரு நோயோ அல்லது தக்க காரணங்களின்றி உடல்சார் கோளாறுகள் தோன்றலாம். அறிகுறிகளாக...

தலையிடி, மயக்கம, வலி, நடுக்கம்
நெஞ்சுநோ, படபடப்பு, சுவாசிக்கக் கஷ்டம்
வயிற்றுவலி, பசியின்மை, வயிற்றோட்டம்
நித்திரைக் குழப்பங்கள். பயங்கரக் கனவுகள் முதலியன.

## கையாளும் முறைகள் (நடைமுறைக்குச் சாத்தியமான)

☞ பெற்றோர், ஆசிரியர்கள், சமூக முன்னோடிகள் பிள்ளைகளுக்குள் ஏற்படக்கூடிய தாக்கங்களை இனங்கண்டுகொள்ளுதல் நன்று. பிள்ளைகளின் நடத்தைகளை அவதானித்து உளச்செயற்பாடுகளை ஊகித்துக்கொள்ளும் ஆற்றலும் தேவைப்படுகின்றது. பாதிக்கப்பட்ட பிள்ளையுடன் சிநேகபூர்வமான நல்லுறவை ஏற்படுத்த வேண்டும். அன்பு, ஆதரவு, விசுவாசம், அரவணைப்பு போன்றவற்றை நிலைநாட்டி நல்லுறவின்பின் பிள்ளை வெளிப்படுத்தும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருத்துக்களை அறிந்து கொள்வதுடன் அவற்றை இரகசியமாகப் பேணவேண்டும்.

- பிள்ளைகள் தயங்கும் பட்சத்தில் பெற்றோருடன் கலந்துரையாடலாம்.
- பிள்ளைகள் அவர்கள் உணர்ச்சிகளை வெளிப்படுத்த சித்திரங்கள் வரைய வைக்கலாம்.
- பிள்ளைகள் சொல்வதற்கு செவிகொடுத்தல் : உளவளத்துணை- செவிமடுத்தலோடு அன்பு, ஆதரவு, பாதுகாப்பு உணர்வை உண்டாக்கி பிள்ளைகள் சிந்தனைகளையும், கவலைகளையும் பகிர்ந்துகொள்ள வாய்ப்பான சூழ்நிலையை உருவாக்க வேண்டும்.
- இறை தியானப் (உளம் உடல் சார்ந்த) பயிற்சிகளுக்கு வழிநடத்துதல்.

**சமூக பொருளாதார தேவைகளைப் பூர்த்திசெய்தல்:**

பாதிக்கப்பட்ட பிள்ளைளுக்கு பாதிப்பை சீர்செய்யும் முறையில் தகுந்த வழிகாட்டல் அவசியம். அரச ஸ்தாபனங்களுக்கு தெரியப்படுத்தி பாதிப்புக்களைத்தணிக்கலாம்.

விசேட பராமரிப்பு:

கடுமையாக உளரீதியாகப் பாதிக்கப்பட்டோரை உள மருத்துவ ஆலோசனைக்குச் செல்வதற்கு வழிகாட்டுதல் .

தொகுப்பு:

உடல் - உள பாதிப்புக்கள் ஏற்பட்ட மக்களுக்கு, குறிப்பாக பிள்ளைகளுக்கு நடைமுறைக்கு சாத்தியமான கையாள்கை முயற்சிகளை மேற்கொண்டு ஊக்குவித்தல் அவசியம். பொருத்தமான கல்வி முறைகளைச் சமூகத்தில் ஏற்படுத்துவதன் மூலம் மக்கள் மத்தியில் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தவும் அதன் மூலம் மக்கள் தமது சுகநலன்களைத் தாமே பேணவும் முடியும்.

நன்றி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழனின் ஆதாரம் பனை

முல்லைத்தீவு கிழக்கு ப.தெ.வ.அ.கூ.சங்கம்
கரைச்சிக்குடியிருப்பு.
முல்லைத்தீவு

புல்லின தாவரம் பனை
மெல் இனத்தாவரம் பனை
கற்பகதரு மரத்தின் அவதாரம்
தொன்மை தமிழை எழுத்தாணி கொண்டு
கற்பில் சுமந்த ஓலைச் சுவடியின் அதிகாரம்
கற்காலம் தொட்டு தற்காலம் வரை
தங்கத் தமிழனின் உயிர்க்கலம்
ஓடு விடும் பாடு படுபவனின்
ஓலைக்கீற்று குடிலையும்
குளிர் சோலையாக்கிய மரக்கலம்
நெடு நெடு என்று வளர்ந்த
பனையே முழுபெரும் பனையே
உச்சியிலே ஒரு முடியைப் போல்


அழகான குருத்தோலை காவோலை
மங்கையவள் கார்குழல் போல்
தென்றல் தீண்ட அசைந்தாடும் பசுங்குழல்
சாரலாய் மண்ணை முத்தமிடும்
குண்டு குண்டு பழங்கள் "நுங்கு"
பதநீர் பனை வெல்லம் பனங்கிழங்கு என
நோய் நீங்க மெய்யான மெய் தந்த
உண் கலம் எல்லாமே மானிடன்
தேவைக்கு ஏற்றால் போல்
தலையாலே சுமக்கின்றாய் - சீரான
நன்றுகள் தந்து தேராக வந்து
தமிழனின் வரலாறு அச்சில் ஏறும் வரை
புராணம் காத்தாள் தமிழுக்கு புராணம் தந்தாள்

---

## குலமகளே வாழியவே!

கரவை பிறேம்

கருமையானதோர் தோற்றம்
நெடியதோர் உருவம்
கண்ணைக் கவர்ந்திடும்
அழகிய தோற்றம்
கவனிக்க வென்று
யாரும் இல்லா விடினும்
யாவர்க்கும் பொருள் தரும்
கற்பகதருவே!
வறுமை நிலை போக்கி
வாழ்வில் உயர்ந்திடவே
தன்னையே ஈர்த்திட்ட
தலைமகள் நீயே
குலம் செழிக்க
குருத்தில் இருந்து
அனைத்தையும் எமக்களித்த
குல மகளே வாழியவே நீ






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "பனை மான்மியம்" -2019 ஓவியப் போட்டியில் மாகாண மட்டத்தில் முதல் மூன்று நிலைகளைப் பெற்ற ஓவியங்கள்

## பிரிவு - 3


**1**

செல்வன் ஜெ.பிரணாப்
தரம் - 6
யா/ ஹாட்லிக் கல்லூரி




**2**

செல்வன் ப.கவிப்பிரியன்
தரம் - 7C
மு/ முல்லைத்தீவு மகா வித்தியாலயம்




**3**

செல்வன் ம.மதுசாந்
தரம் - 6
யா/ செம்பியன்பற்று அ.த.க.பாடசாலை



## பிரிவு - 4


**1**

செல்வி ந.சங்கவி
தரம் - 8C
யா/ வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி




**2**

செல்வி கு.குயிலினி
தரம் - 9D
யா/ வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி




**3**

செல்வன் க.யகிதன்
தரம் - 9
யா/ மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பனை வளம் சார்ந்த அபிவிருத்தியில் மகளிர் கட்டமைப்புக்களின் பங்களிப்பு பூரணமடையாமை.

வி.உதயச்சந்திரன்
பொதுமுகாமையாளர்,
ஒட்டுசுட்டான் ப.தெ.ப.அ.கூ.சங்கம்,
கற்சிலைமடு



ஒரு நாட்டின் மூலவளங்களும், மனித வளங்களும் பூரணமான பயன் பாட்டிற்கு கொண்டு வரும்போதே நாடு வளர்ச்சியடையும். அந்த வகையில் தமிழ் மக்கள் செறிவாக வாழும் இலங்கையின் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தனி உரிமை வள மாக காணப்படும் பனை வளம் தமிழ் மக்களின் பொருளாதார வளங்களில் பிரதான இடம் வகிக்கிறது என்றால் அது மிகையாகாது. எமது முன்னோர்கள் பனை வளத்தின் பயன்பாட்டை நன்கு உணர்ந்ததால் அதனை காமதேனு எனவும் கற்பகதரு எனவும் சம்போக்கி எனவும் தெய்வீக தாவரம் எனவும் போற்றியதுடன் அதனை நன்கு பயன்படுத்தி தமது சுயதேவையினைப் பூர்த்திசெய்து தன் னிறைவு வாழ்க்கை வாழ்ந்து வந்துள்ளார்கள். ஆனால் இடைக்காலத்தில் ஏற்பட்ட நாகரிக மாற்றத்தாலும், நாகரிக மோகத்தாலும் இறக்குமதி பொருட்களின் வரவின் காரணத்தாலும் அருமையான இம்மூலவளம் கைவிடப்பட்டு மக்களின் உயிர்வாழ்வின் உணவுத் தேவைக்காக அந்நியரிடம்கையேந்தும் நிலை ஏற்பட வழிவகுத்துள்ளது என்பதாகும்.

பனைவளத்தின் மூலங்கள் தொழில் முயற்சிகளில் உள்வாங்கப்படும் போதே கூடிய ளவு வருவாயினை பெறக்கூடியதாக உள்ளது. இதுவரைக்கும் பாரம்பரியமாக மேற்கொண்டு வரும் தொழில் முறைகளில் புதியதொழில் நுட்ப உத்திகள் மிக குறைவாகவே உள்வாங்கப் பட்டு உற்பத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளது என்பதை அவதானிக்க முடிகிறது. தொழில்நுட்ப உத்திகளை புகுத்துவதற்கு ஏற்ற வகையில் நிறுவனக் கட்டமைப்புக்களை ஏற்படுத்துவது அவசியமாகும். பனையினை நம்பி வாழ்கின்ற அல்லது தங்கி வாழ்கின்ற மக்களின் பொருளாதாரம் சீரழிந்த நிலையில் 45 வருட காலமாக மரவரி முறையில் அனுபவித்த


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறைந்தளவு பொருளாதார சுதந்திரததையும் கூட்டுறவு அப்படையில் நிறுவனப்படுத்தி அதிக ளவு பொருளாதார சமூக மேம்பாட்டுக்கு வழி சமைக்கும் வகையில் கூட்டுறவு சட்ட அமைப் பின்கீழ் 1972ம் ஆண்டு, 12500 அங்கத்தவர்களைக் கொண்ட 30 கள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவு சங்கங்கள் ஆரம்பிக்கப்பட்டன. இச்சங்கங்கள் பொருளாதார ரீதியில் இயங்க முடி யாத நிலை காணப்பட்ட காரணத்தால் 1973ம் ஆண்டு 18 தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கங்களும் சீரமைக்கப்பட்டதுடன் கள் உற்பத்தி விற்பனை சங்கங் களாக இருந்தன. அதன் தொழிற் பரப்பும் விரிவாக்கப்பட்டு இதுவரை காலமும் கவனத்தில் கொள்ளாத நிலையில் இருந்த வளம் சார்ந்த மக்களின் பங்களிப்பும் பெரும் வழிவகையில் துணை விதிகளில் மாற்றம் செய்வது, கிளை அமைப்புக்களில் இரு மகளிர் பிரதிநிதிகளும் நிர்வாகத்தில் ஒரு மகளீராவது இடம்பெறும் வகையில் மாற்றம் கொண்டு வரப்பட்டது ஏற்றுக் கொள்ளக்கூடியதாக அமைந்துள்ளது.

பனைவளத்தை பாதுகாத்து இத்துறை சார்ந்த தொழில் நுட்ப வளத்தினை மேம்படுத் தும் நிறுவனமாக பனை அபிவிருத்தி சபை 1978ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு பல துறைசார் பிரிவுகளாக இயங்கி வருகின்றது. இதனால் திட்டங்களை வகுத்து பனை அபிவிருத்திச் சபை, பனை ஆராய்ச்சி நிறுவனம் இணைந்து பலதரப்பட்ட தொழில் நுட்பங்களை வழங்கி மகளீர் உறுப்பினர்களின் குடும்ப வளர்ச்சிக்கு ஆதரவு அளித்து அவர்களின் வாழ்வாதாரத்திற்கும், மேம்படுத்தலுக்கும் உந்து சக்தியாக இயங்கி வருகிறது போற்றத்தக்கதாகும்.

எமது சமுதாய அமைப்பில் ஏற்படும் ஒடுக்குமுறைகளும் நீண்டகாலமாக எமது சமூகத் தில் ஏற்படுகின்ற மூட நம்பிக்கைக்கும் இந்த மூடநம்பிக்கைகளில் இருந்து தோற்றம் பெற்ற சமூக வளங்களும் எமது பெண்களின் வாழ்க்கையினை சீரழித்து வருகின்றது. தனது வாழ்க் கையினை சீரமைத்துக்கொள்ள வேண்டுமானால் பெண்கள் தமது இந்நிலை பற்றி விழிப்புக் கொள்வதுடன் காலம் காலமாக பேணிவரும் இருண்ட சூழலில் இருந்து விடுபட்டு உழைத்தல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "பனை மான்மியம்" -2019 ஓவியப் போட்டியில் மாகாண மட்டத்தில் முதல் மூன்று நிலைகளைப் பெற்ற ஓவியங்கள்

## பிரிவு - 5


**1**

செல்வன் இ.துசிகரன்
தரம் - 10
யா/ சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி




**2**

செல்வன் ம.அன்ரன் ஜெனஸ்
தரம் - 10 B
மன்/ புனித வளனார் மகாவித்தியாலயம்



**3**


செல்வன் கஜமுகன்
தரம் - 10
வ/ புதுக்குளம் மகாவித்தியாலயம்



## பிரிவு - 6


**1**

செல்வன் யோ.பானுசியன்
தரம் - 13
யா/ யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி





**2**

செல்வன் பா.நிதர்சன்
தரம் - 13
யா/ யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி




**3**

செல்வன் றா.பிரணவன்
தரம் - 13
யா/ பெரியபுலம் மகா வித்தியாலயம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பனை எங்கள் சூழல்

யாழ்ப்பாணம்

செல்வி. சகாயநாதன் ஜெறில்டா
பணிப்பாளர்.
ப.தெ.வ.அ.கூ.சங்கம்
புதுக்குயிருப்பு

இயற்கை வளம் நிறைந்த எழில்மிகு பூமியிலே மனித குலத்திற்கு கிடைத்த கொடையாம் பனை மரம் எங்கள் சூழலில் ஒரு பொக்கிஷமாக திகழ்ந்து வருகின்றது. பனை மரத்திற்கென பொதுவான ஒரு பழமொழி இங்கு உண்டு. "பனை இருந்தாலும் ஆயிரம் இறந்தாலும் ஆயிரம்" இப்பனை மரத்திலிருந்து 801 வகையான பயன்கள் எமது சூழலுக்கு கிடைக்கின்றது. 100 அடி உயரம் வரைவளரக்கூடிய இப்பனை மரமானது கிட்டத்தட்ட 120-150 ஆண்டுகள்வரை நீண்டு செல்கின்றது. இதிலிருந்து பெறப்படும் பொருட்கள் மிகவும் உறுதியானவையாகும். நீண்டகாலம் பாவிக்கக் கூயவை யாகவும் உள்ளன.

எம் சூழல் வாழ் மக்களின் உணவு உறையுள் மற்றும் பாதுகாப்பு போன்ற அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்கின்றது. அத்தோடு அவர்கள் வளர்க்கும் கால் நடைகளுக்கும் உணவாகவும், தோட்டம், வயல் நிலங்களுக்கு பசளையாகவும் அதுமட்டுமல்லாமல் பறவைகளின் வாழ்விடமாகவும் இருந்து எம்மக்களின் வாழ்விற்கு உறுதுணையாக எம்மோடு துணை நிற்கின்றது.

பனைமரத்தினால் எமது சூழலுக்கு பல்வேறு விதமான நன்மைகள் கிடைக்கின்றது. அந்தவகையில் மண்ணைப் பற்றிப்பிடித்து மண்ணரிப்பைத் தடுத்து மண்வளத்தைப் பாதுகாப் பதோடு மட்டுமல்லாமல் நிலத்தடி நீர்வளத்தையும் உயர்த்தும் தன்மையும் கொண்டு இப்பனை யானது காணப்படுகின்றது. அதுபோன்று எமது மக்களின் தேவைகளை நிவர்த்தி செய்யக் கூடிய வகையில் பனைமரங்கள் முக்கியத்துவம் பெறுகின்றன. அந்தவகையில் நமது மூதா தையர்கள் பனைசார் உணவுப்பொருட்களை முக்கியமான உணவாகவும் தமது வாழ்க்கை யின் முக்கிய அம்சமாகவும் பேணிவந்துள்ளனர். இம்மரமானது மனிதர்களிடமிருந்து எதை யும் எதிர்பார்க்காமல் தானாகவே வளர்ந்து எம் சூழலில் வாழும் மக்களுக்கு உணவு, உறையுள் கல்விக்கு ஏடு, வீடுவேய ஓலை, பாதுகாப்பிற்குவேலி அத்துடன் நார்வேர்களால் நம்பூமியையும் பாதுகாத்து வருகின்றது. இதனால்தான் "கற்பகதரு" என மக்கள் அழைத்து வந்தனர். அது மட்டுமல்லாமல் "கற்பகம்" என்னும் தமிழினத்தின் வாழ்க்கையோடு இணைந்த மரம் என்றும் "பஞ்சம்போக்கி" என்றும் அழைக்கின்றனர்.

பனை ஒருமரம் என்பதைவிட மண்ணுக்கு கிடைத்த வரம் என்று கூறலாம். எமது சூழ லில் கலாச்சாரத்தோடும் பொருளாதாரத்தோடும் பல தலைமுறைகளாகப் பின்னிப்பிணைந்து காணப்படுகின்றது. பழமையான காலத்தில் பனை மரமானது வெற்றி, அமைதி, வளமை ஆகியவற்றைக் குறிக்கும் ஒரு சின்னமாகவும் விளங்குகிறது. அடைமழைகாலத்தில் எமது குடிசைகளையும், மாட்டுக் கொட்டகைகளையும் காப்பாற்றி ஒரு இடிதாங்கியாய் செயற்பட்ட வரலாறும் இப்பனைமரத்திற்கு உண்டு.

எனவே எமது சூழலில் காணப்படும் பனை மரங்களைப் பாதுகாத்து அதனை வளப் படுத்தி அதன்மூலம் நாம் பயனைப்பெற்று எதிர்கால சந்ததிக்கும் வழிகாட்ட இப்பனை மரங்களைப் பேணிப்பாதுகாப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பனை எங்கள் பொருளாதாரம்

திருமதி. தர்மராசா நிற்றா
பணியாளர்
ப.தெ.வ.அ.கூ.சங்கம்
புதுக்குடியிருப்பு

"திணைத்துணை நன்றி செய்யினும் பனைத்துணையாகக் கொள்வார் பயன்தெளிவார்" என்ற குறளின்படி எந்தவித செலவுமின்றி வளர்ந்துநிற்கும் சில கோடி பனை மரங்களையாவது பாதுகாக்க வேண்டும். பனையின் பயனைப்பெற புதிய வழிகளை உருவாக்க வேண்டும். புதிய தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி தமிழர்களின் அடையாளமாக உள்ள பனை மரத்தை அழிவின் விளிம்பிலிருந்து மீட்க வேண்டும் என்பது இயற்கை ஆர்வலர்களின் விருப்பமாகும். பனை மரத்தின் பலன்கள் பலநூறு தலவிருட்சங்கள் தரும் பலன்கள் என்று சொன்னால் அது மிகையாகாது. மனித உடலுக்கும், கண்களுக்கும் தெரியாமல் இருக்கும் உறுப்புக்களில் மிகமுக்கியமானது கல்லீரல் இது சரியான முறையில் இயங்கினால்தான் மற்ற அனைத்து உறுப்புக்களும் சீராக இயங்க முடியும். உணவுப்பொருள் செரிமானம் இரத்த உற்பத்தி, நச்சுப்பொருள் உற்பத்தி, இரத்த சிதைவு என இவற்றிற்கெல்லாம் முக்கிய உறுப்பாக கல்லீரல் காணப்படுகின்றது. இது வீக்கம் அடைந்தால் அது புற்றுநோயாகவும் மாறக்கூடும். இது போன்ற கல்லீரல் உபாதைகளுக்கு சரியான மருந்து இயற்கை நமக்களித்திருக்கும் வரப்பிரசாதம் பனையாகும். பனைமரத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்துதான் வடக்கு மக்களின் சின்னமாக இதனை கொள்கின்றனர். இலங்கையில் ஒரு குறிப்பிட்ட இனத்தவர் பனைமரம் ஏறுவதைத் தங்களது குலத்தொழிலாகக் கொண்டிருப்பார்கள். இவர்கள் பெண் தெய்வ மாக பத்திரகாளியின் அம்சமாக பனை மரத்தை வணங்கி வருகிறார்கள். தங்களை பத்திரகாளியின் பிள்ளைகள் என்று சொல்லிக்கொள்வதில் பெருமை அடைவார்கள். சில இடங்களில் பனை மரத்தை பனைவேலியம்மன் என்ற பெண்தெய்வமாகவும் வணங்கி வருகிறார்கள். இது இவர்களின் தலவிருட்சம் என்று சொல்வதில் ஐயமில்லை.

பனை மரத்திலிருந்து கிடைக்கக்கூடிய பதநீர் அனைவரும் விரும்பி அருந்தக்கூடிய குளிர்ச்சியான பானமாகும். இந்த பதநீர் உடல் வெப்பத்தைக் குறைத்து உடலை குளிர்ச்சியாக வைத்திருக்கிறது. அத்தோடு எலும்புகளையும், கல்லீரலையும் பலப்படுத்துகின்றது. பதநீரிலிருந்து தயாரிக்கப்படும் கருப்பட்டி, பனஞ்சீனி, பனங்கற்கண்டு ஆகியவையும் மருத்துவ குணங்கள் கொண்டவை. பதநீரில் அடங்கியுள்ள சத்துக்கள் சர்க்கரைச்சத்து, கல்சியம், விட்டமின் சீ, நிகோனிக்கமிலம், புரதம் போன்றவையாகும். ஏறத்தாள 50 ஆண்டுகளுக்கு முன்பு இலங்கையில் ஏறத்தாள 10 கோடி பனை மரங்கள்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ள நிலையில் தற்போது 2 கோடி பனைமரங்கள் உள்ளன. இவையும் தற்போது அழிக்கப்பட்டு வருகின்றன. பனையில் ஆண், பெண் என இரண்டு வகை உள்ளன என்று சொல்லப்படுகின்றது. பெண்பனையை பருவப்பனை என்றும், ஆண்பனையை அழகுப்பனை என்றும் குறிப்பிடுவது வழக்கம். பனைமரமானது 10 ஆண்டுகளுக்குப் பின் 15 அடி உயரம் வரை வளர்கிறது. இந்த 10 ஆண்டுகளுக்குப் பின்னர்தான் பூ பூக்கும். அப்போதுதான் ஆண்பனை, பெண்பனை எது என்பதைத் தெரிந்துகொள்ள முடியும். பனைசார் தொழில் அடைவுகள் பயன்பாட்டை உற்றுநோக்கினால் 5 படி கொள்வனவு கொண்டவை குட்டான் என்றும் 7 படியிலிருந்து 11 படிவரை கொள்வனவு உள்ள பெட்டிவகைகள் சீர்வரிசைப் பெட்டிகள் எனவும், 20 படியிலிருந்து 30 படிவரை கொள்வனவு கொண்ட நார்ப்பெட்டிகள் அரைப்பெட்டிகள் எனவும், 5 மரக்கால் அள வுள்ள பெரிய நேர்த்தியான நார்ப்பெட்டிகள் கடகம் என்றும், நெல் இதரத்தானியங்களை காற்றிலேதுாற்றி தரம்பிரிக்க பயன்படுத்துபவை துாற்றுப்பெட்டிகள் என்றும் தானியங் களைப் புடைத்து எடுக்க சுளகு அல்லது முறம் என்றும் சரக்குகளை கட்டி அனுப்ப பனைப்பாய்கள் என அழைத்து அதனைப்பயன்படுத்தி வந்தனர். இதனைத்தவிர மட்டை யிலிருந்து நார் எடுத்து மெத்தைகள், பிரஸ்கள், ஆடைகள், கால்மிதிகள் வீட்டு அழகு சாதனப்பொருட்களும் பனையிலிருந்து தயாரிக்கப்படுகின்றன. முன்னைய காலங்களில் இலங்கையில் பனை மரத்தின் பெயரைக் கொண்ட பல கிராமங்கள் பனை யின் பயனைப் பயன்படுத்தி தமது பொருளாதாரத்தை வழிசமைத்தது போன்று இன்றும் எமது நாட்டில் 2009ம் ஆண்டு நடைபெற்ற யுத்தத்தில் கணவனை இழந்த விதவைப் பெண்கள், பெற்றோரை இழந்த அநாதைப் பிள்ளைகள், ஊனமுற்றவர்கள் தமது வாழ்வாதாரத்தை பனையிலிருந்து பெற்று தங்களின் அன்றாட தேவையைப் பூர்த்தி செய்கின்ற வகையில் முன்னேறிச் செல்வதை காணமுடிகிறது.

எனவே, வாழ்வாதாரத்தில் முக்கிய பங்கு வகிக்கும் பனை மரம் ஆன்மீகத்திலும் முக்கிய பங்கு வகிக்கின்றது. எம் நாட்டிலுள்ள பலதிருத்தலங்களில் அது தலவிருட்சமாக வழங்கப்படுகிறது. நம் ஆன்மீகப் பெரியவர்களின் இறைப்பற்றையும் இறைவனின் கருணையையும் மக்களுக்கு உணர்த்துகின்ற வகையில் ஆன்மீக வாழ்க்கையிலும் பொருளாதாரத்திலும் முக்கிய பங்கு வகிக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி பகிர்தல்



பனைமரத்தின் வரலாறுகளை பதிவு செய்வதற்காகவும் அதன் பெருமைகளை வெளிக்கொணர்வதற்காகவும் வருடாவருடம் வடக்கு மாகாணத்தில் "பனைமான்மியம்" யூலை 22முதல் யூலை 28 வரை கண்காட்சி விற்பனை கூடங்களை நிறுவி அனுஷ்டிக்கப்படுகின்றது. இந்நிகழ்வானது ஆரம்பிக்கும் போது சஞ்சிகை ஒன்றும் வெளியிடப்படுகின்றது. பனை எங்கள் சூழல், பனை எங்கள் பண்பாடு, பனை எங்கள் பொருளாதாரம் எனும் தொனிப் பொருளில் நடைபெறும் நிகழ்வில் 2018ம் ஆண்டு "தாலம்" ஓலை 1 என்கின்ற சஞ்சிகை முதன் முதலில் வெளியிடப்பட்டது. இதன் தொடர்ச்சியாக 2019ம் ஆண்டும் இந்நிகழ்வில் வெளியிடப்படும் "தாலம்" ஓலை 2 சஞ்சிகைக்கான வாழ்த்துரைகளை வழங்கிய பெருந்தகைகளுக்கும் மலருக்கான ஆக்கங்களை எழுதிய எழுத்தாளர்களுக்கும் அட்டைப் படத்தினை கணனி வடிவமைப்புச் செய்த அச்சக முகாமையாளர் சுகிர்தன் அவர்களுக்கும், தட்டச்சு செய்து உதவிய சமாச கணக்காளர் மற்றும் கல்வி அலுவலர் ஆகியோருக்கும், மலருக்கான விளம்பரங்களை வழங்கிய கூட்டுறவு நிறுவனங்களுக்கும், மலரினை சிறந்த முறையில் அச்சிட்டு வழங்கிய யாழ். மாவட்ட பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவு சங்கங்களின் சமாச அச்சகத்தினருக்கும், நிகழ்வில் கண்காட்சிக் கூடங்களை அமைத்து, உற்பத்திகளை காட்சிப்படுத்தும் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள், கொத்தணிகள், பனை அபிவிருத்திச் சபை, மகளீர் குழுக்கள், சித்த வைத்திய கூட்டுறவுச் சங்கம் என்பவற்றுக்கும், கூட்டுறவு நிறுவனங்களின் தலைவர்கள், நிர்வாக உறுப்பினர்கள், அங்கத்தவர்கள், பொதுமுகாமையாளர்கள், பணியாளர்கள், கூட்டுறுவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்கள், கூட்டுறவுத் திணைக்கள உத்தியோகத்தர்கள், மலர் வெளியீட்டுரை மற்றும் ஆய்வுரைகளை மேற்கொள்பவர்கள், பனை எழுச்சி வார ஏற்பாட்டாளர்கள், ஆரம்ப நிகழ்வில் கலந்து கொண்ட பிரதம விருந்தினர், சிறப்பு விருந்தினர்கள் ஆகியோருக்கும், கண்காட்சி கூடங்களுக்கு இடத்தினை வழங்கிய மாநகர சபைக்கும் கண்காட்சி நிகழ்வில் கலந்துகொண்ட அனைத்து தரப்பினர்களுக்கும் பனை அபிவிருத்தி வார நிகழ்வுகளில் அனைத்து வழிகளிலும் ஒத்துழைப்பு வழங்கிய அன்புள்ளங்களுக்கும் எல்லாவற்றுக்கும் மேலாக தூரநோக்க சிந்தனையும் தீர்க்க தரிசனமும் கொண்டு நிகழ்வுகளை திட்டமிட்டு ஒழுங்கு செய்த கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும், கூட்டுறவுச் சங்கப் பதிவாளருமாகிய உயர் திரு பொ. வாகீசன் அவர்களுக்கும் "தாலம்" ஓலை 2 தலை வணங்கி நன்றிகளைப் பகிர்கின்றது.

**"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை**
**செய்ந்நன்றி கொன்ற மகற்கு"**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org